வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 26.12.2022 திங்கட்கிழமை இதழ் : 17 பக்கங்கள் : 15




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒரு வருடம் பிற்போடப்படும்?

## போலி ஆவணங்களை அனுப்பவும் திட்டம்

கொழும்பு, டிசெம்பர் 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இன்னும் ஒரு வருடத்துக்கு பிற்போடப்படலாம் என்று கொழும்பின் உயர் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி, முதற்கட்டமாக 6 மாதங்களுக்கும், மீண்டும் 6 மாதங்களுக்கும் வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## மின்சாரம் வழங்கிய வகையில் ரூ. ஒரு இலட்சம் கோடி கடன்!

கொழும்பு, டிசெ. 26

மின்சாரத்தை வழங்கிய வகையில் ஒரு ட்ரில்லியன் (ஒரு இலட்சம் கோடி) ரூபாயை அரசு கடனாக செலுத்த வேண்டியுள்ளது என்று பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காணும் உபகுழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு மின்சாரம் வழங்குநர்கள், ஒப்பந்தக் காரர்கள் மற்றும் பொது மற்றும்

15

## யாழ். – சென்னை விமானத்தில் பயணிப்போர் தொகை உயர்வு!

யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்ப்பாணம் - சென்னை இடையே சேவையில் ஈடுபடும் விமானம் நிறைந்த பயணிகளுடன் பயணித்து வருகிறது என்று யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்தின் செயல்பாட்டு முகாமையாளர் லக்ஷ்மன் வன்சேகர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான விமான சேவை கடந்த 12 ஆம் திகதி மீண்டும் தொடங்கியது. நேற்றுமுன்தினம் 8ஆவது நாளாக விமான சேவை நடைபெற்றது. இதன்போது,

15

நத்தார் தினத்தில்

## தேவாலயத்தில் தோட்டாக்கள் மீட்பு

புத்தளம், டிசெ. 26

மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் பக்தர்கள் வழங்கிய காணிக்கைகளை பரிசோதித்தபோது சிறிய கறுப்புப் பெட்டியொன்றில், இரண்டு ரி-56 ரக துப்பாக்கி தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு மேலதிகமாக மெதகம, இரத்தினகிரிய கோபியவத்த, இரட்டைகுளம், ஹரேந்திரகம, தரான ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள தேவாலயங்களிலும் நத்தார் ஆராதனைகள் இடம்பெற்றன.

இந்த தேவாலயங்களுக்கு பக்தர்கள் வழங்கிய

15



இயேசு பிரானின் பிறப்பை கொண்டாடும் கிறிஸ்மஸ் தினம் நேற்று உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் தேவாலயங்கள், இல்லங்கள் தோறும் குடில்கள் அமைத்து பாலனின் பிறப்பு வரவேற்கப்பட்டது. அந்தச் சமயம் மரியன்னை பேராலயத்தில் எடுக்கப்பட்ட படம்...! (படம் : ஐ. சிவசாந்தன்)

## தொழில்முறையாக உதைபந்து விளையாடுவதற்கு ஒரு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட விளையாட்டை தொழில்முறையாக விளையாடுவதற்கு ஒரு வாய்ப்பை நல்லூர் முருகன் விளையாட்டுக் கழகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

புதிதாக உதயமாகும் நல்லூர் முருகன் உதைபந்தாட்ட கழகத்தில் இணையும் ஒவ்வொரு வீரருக்கும் மாத சம்பளத்துடன்

15

மலையகத்தில் கடும்மழை

## வெள்ளத்தில் அக்குரணை; சகோதரர்கள் இருவர் பலி!

கண்டி, டிசெ. 25

மலையகத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் பெய்து வரும் கடும் மழையால் கண்டியில் அக்குரணை நகரம் உட்பட பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

அக்குரணை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள

15

## மன்னாரில் மீனவர்கள் இருவர் மாயம்!

மன்னார், டிசெ. 26

மன்னார் கடலில் மீன் பிடிக்க சென்ற இரு மீனவர்களை காணவில்லை என மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

15

## “நாட்டில் சகல தரப்பினரும் சட்டத்துக்கு புறம்பாக வருமானம் பெறுகின்றனர்!”

கொழும்பு, டிசெ. 26

நாட்டில் இன்று நேர்மை காணப்படுகின்றதா? அடி மட்டத்திலிருந்து உயர்மட்டத்தில் உள்ளவர்கள் வரை அனைவரும் சட்டத்துக்கு முரணாகவே வருமானம் பெறுகின்றனர். நாட்டை பொறுப்பேற்கும் தலைவர்களும் அவ்வாறே செயல்படுகின்றனர். இது எமது நாட்டில் பரவியுள்ள ஒருவகை

15



## ஆழிப் பேரலை அழிவின் 18ஆவது ஆண்டு இன்று!

கொழும்பு, டிசெ. 26

ஆழிப் பேரலை தாக்கிய 18ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். 2004 டிசெம்பர் 26ஆம் திகதி நாட்டை தாக்கிய ஆழிப் பேரலையில் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயமடைந்தனர்.

ஆழிப் பேரலை நாட்டின் 14 மாவட்டங்களை தாக்கிய நிலையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களே அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டன.

இந்நிலையில், இன்று ஆழிப்பேரலை அழித்தவர்களை நினைவுகூர்ந்து நாடு

15

ஆழிப்பேரலை 18 ஆண்டுகள்:

## உடுத்துறையில் இன்று பிரதான நினைவேந்தல்!

வடமராட்சி, டிசெ. 26

ஆழிப்பேரலை அழிவின் 18 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். இதையொட்டி அதிக பாதிப்புக்களை சந்தித்த வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆழிப் பேரலையில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் பிரதான நிகழ்வு வடமராட்சி கிழக்கின் உடுத்துறையில் நடைபெறவுள்ளது.

உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில்

15

## இரண்டு நிமிடங்கள் அஞ்சலி செலுத்துக!

கொழும்பு, டிசெ. 26

ஆழிப் பேரலை அனர்த்தம் நிகழ்ந்து இன்று 18 ஆவது ஆண்டு நினைவேந்தலாகும். இன்றைய தினம் 2 நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுனாமி மற்றும் ஏனைய அனர்த்தங்களால் உயிரிழந்த இலங்கையர்களை நினைவுகூரும் வகையில் இன்று திங்கட்கிழமை சுனாமி அலை தாக்கிய காலை 9.25 மணி முதல் 9.27 வரையான இரு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு

15

## இப்படியும் நடக்கிறது...!

பூட்டான் தலைநகர் திம்புவில் தமிழர் தரப்புக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுகள் இன்றும் பேசப்படுவன.

திம்புவில் தமிழர் தரப்பில் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் திம்பு கோட்பாடுகள் என்று இன்றும் பேசப்படுகின்றன.

இந்தத் திம்பு பேச்சில் ஒவ்வோர் இயக்கத்திலும் இருந்த இரண்டாம்நிலை தலைவர்கள் அல்லது அரசியல்துறை சார்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

அவ்வாறு அவர்கள் திம்புவில் பேச்சில் கலந்துகொண்டிருந்தபோது, அவர்கள் தத்தமது தலைவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசுவதற்காக சென்னையில் இந்திய அரசு ஓர் அலுவலகத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இன்று இருப்பதுபோல தொழில்நுட்ப வசதிகள் அப்போது இருக்கவில்லை. அதனால்தான் ஓர் அலுவலகத்தை அமைத்து அதில் திம்புப் பேச்சு நடக்கும் இடத்துக்கும் சென்னைக்கும் இடையே நேரடி தொடர்புக்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இந்த இடத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன், ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா, ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் போன்ற அனைத்துத் தலைவர்களும் அவ்வப்போது தங்கியிருந்து திம்பு பேச்சில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தனர்.

இன்றும் அரச தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையே பேச்சு நடக்கின்றது. அந்தப் பேச்சில் தலைவர்களே கலந்துகொள்கின்றனர் என்பதால் அப்படியொரு தேவை ஏற்படவில்லை என்று சிலர் வாதிடலாம். ஆனால், இன்றிருக்கும் தலைவர்கள் என்போர், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்ற தலைவர்கள்தானா என்பது கேள்விக்குரியது. அதேவேளை, இவர்கள் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஒரு முக்கிய தருணத்தில் சரியான முடிவை எடுக்கக்கூடியவர்கள்தானா என்ற கேள்வியும் சிலர் தொடர்பாக உண்டு. மக்கள்தானே அவர்களை தெரிவுசெய்து அனுப்பிவைத்தார்கள். அவர்கள்தான் மக்கள் பிரதிநிகள் என்றும் சிலர் வாதிடலாம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கு ஒன்றில், பேச்சுக்கு செல்கின்றவர்களை நெறிப்படுத்துவதற்காகவும், ஒருமித்த குரலில் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு ஏதுவாகவும், ஒரு செயலணி ஒன்றை அமைக்கவேண்டும் என்றும், அந்த செயலணியுடன் ஆலோசனை நடத்தியே பேச்சில் கலந்துகொள்கின்றவர்கள் தமது பேச்சை நடத்தவேண்டும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டதாம்.

அதனைப் பலரும் ஏற்றுக்கொண்டபோதிலும், அதற்கான செயலணியை அன்றைய கருத்தரங்கிலேயே தெரிவுசெய்ய வேண்டும் என்றும் சிலர் அழுத்திக்கேட்டதாகவும் ஆனால், அதில் கலந்துகொண்டிருந்த சிலர் செயலணி அவசியம் என்றாலும் அதனை அமைப்பதிலும் சில ஒழுங்குமுறைகள் பேணப்படவேண்டும் எனவும், இந்தக் கருத்தரங்கு அதற்காகவே கூட்டப்பட்டிருந்தாலும்கூட அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் ஆனால், வேறு நோக்கத்தோடு கூட்டப்பட்ட இந்தக் கருத்தரங்கில் அப்படியொரு யோசனையை முன்வைத்தவிட்டு உடனேயே அதனை அமைப்பது தவறானது என்று விடாப்பிடியாக மறுத்ததைத் தொடர்ந்தே அந்த செயலணி அமைக்கின்ற விடயம் நடைபெறவில்லை.

இன்று கூட்டமைப்பு என்ற ஓர் இயக்கத்துக்கு உள்ளேயே, ரெலோ முன்னரைப்போல இல்லாமல் தன்னாலும் எல்லாம் முடியும் என்ற பாணியில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்பு என்றால் அந்த இருவர்தான் என்ற விம்பம் இப்போது ரெலோவால் தகர்ந்து கொண்டிருக்கின்றது. இதனை சரிசெய்ய செயலணியை பயன்படுத்தலாம் என்று சிலர் விரும்புவதில் தவறில்லைத்தான். ஆனால், அப்படியொரு செயலணி உருவாகினால்கூட அது இன்றைய தமிழ் தேசியக் கட்சிகளை கட்டுப்படுத்த - நெறிப்படுத்தக்கூடிய செயலணியாக அல்லவா இருக்கவேண்டும்.

நல்ல முயற்சிதான், அப்பயொரு செயலணி அமைக்கப்படுமானால், அதற்கான பிரதிநிதிகளையும் அந்தத் தேசியக் கட்சிகளே நியமிக்கவேண்டும். அதைவிடுத்து நான்கு பேர் சேர்ந்து ஒரு செயலணியை அமைத்துவிட்டு அதன் சொல்படி நடவுங்கள் என்று சொன்னால் அது வடிவேலுவின் நகைச்சுவையைவிட சிறப்பான கொமெடிதான்.!

**- ஊர்க்குருவி**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மார்கழி பெருவிழா சிறப்புற நடந்தது!









படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சைவசித்தாந்தத் துறையும் தென்னாடு செந்தமிழாகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து நடத்திய மார்கழிப் பெருவிழா-2022 நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள சிறீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து, தேவாரத் திருமுறையுடன் சைவக் குரவர்கள் நால்வரும் எழுந்தருள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. காலை, மாலை அரங்கங்களாக நிகழ்வுகள் இடம்பெற்றதோடு, கலந்து கொண்டவர்களுக்கு அமுதூட்டும் அன்னதானமும் இடம்பெற்றது.

காலை அரங்க நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை தலைவர் கலாநிதி பொன்னுத்துரை சந்திரசேகரம் தொடக்க உரையையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா வாழ்த்துரையையும் ஆற்றினர். அத்துடன், திருமுறை விண்ணப்பம், சிறப்புரை, கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றன.

மாலை அரங்க நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகியது. இதன்போதும் தொடக்க உரை, வாழ்த்துரை, திருமுறை விண்ணப்பம், சிறப்புரை, திருவாசக கட்டுரைப் போட்டிக்கான பரி சில் வழங்கல் என்பன இடம்பெற்றன.

திருமுறை விண்ணப்பம் மற்றும் சிறப்புரைக் காக இந்தியாவின் தமிழகத்திலிருந்து துறைசார் சான்றோர்களான அண்ணாமலைப் பல்கலைக் கழக தேவார உதவிப் பேராசிரியர் திருஞான பாலச்சந்திரன் ஓதுவார் மற்றும் தருமை ஆதீனப் புலவர் எம்.கே.பிரபாகர மூர்த்தி ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

(ஐ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பரந்த கூட்டணி நிறுவப்படும்!

## பெரமுனவின் சாகர காரியவசம்

கொழும்பு, டிசெ. 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவை முன்னிலைப் படுத்தியே பரந்துபட்ட அரசியல் கூட்டணி ஸ்தாபிக்கப் படும். ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து அமைக்கும் அரசியல் கூட்டணியை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், தேர்தலுக்கு அஞ்சி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட வேண்டிய தேவை கட்சி என்ற ரீதியில் எமக்கு கிடையாது. நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் தேர்தலை நடத்துவது எந்தளவிற்கு சாத்தியமாக அமையும் என்பது



தொடர்பில் ஆராய வேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெரும் நிதி செலவுகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்தினால் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடையும்.அரச சேவையாளர்களுக்கு மாத சம்பளத்தை வழங்குவது கூட பெரும் போராட்டமாக உள்ள நிலையில் தேர்தலை எவ்வாறு நடத்துவது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு பிரதான 8 அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். சிறீலங்கா பொதுஜன பெரமுனவை முன்னிலைப்படுத்தியே புதிய அரசியல் கூட்டணி ஸ்தாபிக்கப்படும்.

சிறீ லங்கா பொதுன பெரமுனவின் அரசியல் கொள்கைக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் கொள்கைக்கும் இடையில் வேறுப்பாடுகள் உள்ளன. நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ள போது அரசியல் கொள்கைகளுக்கு முன்னுரிமை வழங்கக்கூடாது என்பதற்காக கொள்கைக்கு அப்பால்பட்ட வகையில் ஒன்றிணைந்து செயல்படுகிறோம்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து அமைக்கும் அரசியல் கூட்டணியை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு,அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
26.12.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மத்தியஸ்தம் தொடர்பில் பொது உடன்பாடிருக்கின்றதா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் பேச்சுகளில் இந்திய மத்தியஸ்தத்தையும் கூடவே, அமெரிக்க, பிரித்தானிய தலையீடுகளையும் வலியுறுத்தி வருகின்றார். சர்வகட்சி சந்திப்புக்கு முன்னரும் இவ்வாறான கருத்தை அவர் தெரிவித்திருந்தார். இதேபோன்று, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரனும் இந்திய மத்தியஸ்தத்தை வலியுறுத்தியிருந்தார். ஆனால், சர்வகட்சி சந்திப்பின்போது, அவ்வாறான நிலைப்பாட்டை செல்வம் அடைக்கலநாதனும் விக்னேஸ்வரனும் வெளிப்படுத்தவில்லை. சம்பந்தன் அவ்வாறான நிலைப்பாட்டை வலியுறுத்துவதை விரும்பியிருக்காத நிலையிலேயே மத்தியஸ்த கோரிக்கையானது சர்வகட்சிக் கூட்டத்தின்போது வலியுறுத்தப்படவில்லை. ஆனால், பொதுவெளிகளில் செல்வம் அடைக்கலநாதன் அவ்வாறான நிலைப்பாட்டை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றார். ஆனால், கூட்டமைப்புக்குள் முக்கியமாக சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் மத்தியஸ்தத்தை வலியுறுத்துவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. முக்கியமாக இந்திய மத்தியஸ்தத்தை கோருவதை சம்பந்தன் விரும்பவில்லை.

சம்பந்தனை பொறுத்தவரையில் அவ்வாறு கோரினால் சிங்களவர்கள் கோபிப்பார்கள். ரணில் - மைத்திரி ஆட்சிக்காலத்தில் இந்தியத் தலையீட்டை தவிர்ப்பதிலேயே சம்பந்தன் ஆர்வம் காண்பித்திருந்தார். சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஒரு சந்தர்ப்பத்தில்கூட புதுடில்லி செல்லவில்லை. மகிந்த ராஜபக்ஷ காலத்தில் பேச்சுகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, அப்போது கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்த சுரேஷ் பிறேமச்சந்திரன் புதுடில்லி செல்லும் கோரிக்கையை முன்வைத்த சந்தர்ப்பத்திலும் சம்பந்தன் அதனை ஆதரிக்கவில்லை. சிங்களவர்கள் கோபிப்பார்கள் என்னும் பதிலையே கூறியிருந்தார். சிங்களவர்கள் இந்திய மத்தியஸ்த விடயத்தில் மட்டுமல்ல - சமஷ்டியை வலியுறுத்தினால் - அதேபோன்று, போர் குற்றங்களை வலியுறுத்தினாலும்தான் கோபிப்பார்கள். சிங்களவர்கள் கோபித்து விடக் கூடாதென்று எண்ணினால் இவ்வாறான விடயங்களையும் தமிழர்கள் கோரக்கூடாது.

ஈழத் தமிழர்களின் பிரச்னையை ஓர் அரசியல் பிரச்னையாக நோக்கும் ஒரேயொரு நாடு இந்தியா மட்டும்தான். இந்தப் பின்னணியில் மத்தியஸ்தத்தை வகிக்கக்கூடிய தகுதியுள்ள ஒரேயொரு நாடென்றால், அது இந்தியா மட்டும் தான். இந்த நிலையில், இந்தியாவின் மத்தியஸ்தத்தைக் கோருவதில் தவறில்லை. ஆனால், முதலில் இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும். அதேவேளை, பொதுவிடயங்களில் கூட்டமைப்போடு இணைந்து செயல்பட்டுவரும் விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினர் மத்தியிலும் இந்த விடயத்தில் ஒரு பொது புரிதலிருக்கவேண்டும். வெறுமனே ஊடகங்களில் அறிக்கையிடுவதால் பயனில்லை.

பொதுவெளிகளில் இவ்வாறான விடயங்களை பேசுவதற்கு மாறாக, முதலில் ரெலோ தனது நிலைப்பாட்டை கூட்டமைப்பில் உள்ளவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். சம்பந்தனை பொறுத்தவரையில், இந்தியப் பிரதமர் சிறீ நரேந்திர மோடியின் அழைப்பையே உதாசீனம் செய்தவர். அதற்கு மலினமான காரணங்களை கூறியவர். உண்மையில், அது இந்தியாவை அவமதிக்கும் ஒரு செயலாகும். இதன் பின்னர் புதுடில்லிக்கு செல்வதற்கான வாய்ப்புப் கோரப்பட்ட போதிலும் இதுவரையில் அதற்கு சாதகமான பதில் புதுடில்லியிலிருந்து வரவில்லை. அந்தச் செயலைக்கூட, பங்காளிக் கட்சிகள் கண்டிக்கவில்லை. இதேபோன்று, ரெலோவின் ஏற்பாட்டில், இந்திய பிரதமருக்கு கடிதம் அனுப்பும் விடயத்திலும் சம்பந்தன் ஆரம்பத்தில் இணங்கியிருக்கவில்லை. பின்னர் சில விடயங்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டுமென்னும் நிபந்தனையின் அடிப்படையில்தான் இணங்கியிருந்தார்.

எனவே, இந்திய மத்தியஸ்தம் அல்லது ஆலோசனையை கோருவது தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வருவது கட்டாயமானது. அவ்வாறு வரமுடியாவிட்டால் இவ்வாறான விடயங்களை பொது வெளிகளில் விவாதிப்பதை முற்றிலும் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது. ஏனெனில் இவ்வாறான விடயங்கள் தமிழ்த் தேசிய தரப்புக்களின் முதிர்ச்சியின்மையாகவே நோக்கப்படும்.

# முந்திச்சென்ற மோட்டார் சைக்கிளை லொறி மோதியதில் இளைஞர் பலி!

*கொழும்பு, டிசெ. 26*

*மொனராகலை - பிபிலை பகுதியில் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் 20 வயது இளைஞர் உயிரிழந்தார்.*

*நேற்று முன்தினம், பிபிலை- அம்பாறை பிரதான வீதியில் அம்பாறை நோக்கிப் பயணித்துக் கொண் டிருந்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்டிருந்த லொறியை முந்திச் செல்ல முயன்ற போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.*

*விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் பிபிலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார். உயிரிழந்தவர் பதுளையை சேர்ந்தவர் என்று தெரிய வந்துள்ளது.*

*லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். பிபிலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.* (ஐ)

# வனவள அமைச்சு நிறுவனங்கள் சாதனை வருமானத்தை ஈட்டின!

*கொழும்பு, டிசெ. 26*

*வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள நிறுவனங்கள் இந்த ஆண்டு சாதனை வருமானத்தை ஈட்டியுள்ளன.*

*விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அண்மையில் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இந்த விடயம் தெரிய வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.*

*இதன்படி, வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் இந்த வருடம் 1,291 மில்லியன் ரூபாயையும், தேசிய விலங்கியல் திணைகளம் 414 மில்லியன் ரூபாயையும் ஈட்டியுள்ளன.*

*வன பாதுகாப்பு திணைக்களம் 672 மில்லியன் ரூபாயையும், அரச மரக் கூட்டுத்தாபனம் 4,316 மில்லியன் ரூபாயையும் வருமானமாக ஈட்டியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.* (ஐ)

## சிவனொளிபாத மலைக்கு சென்ற இளைஞர் திடீரென உயிரிழப்பு!

*ஹற்றன், டிசெ. 26*

*சிவனொளிபாதமலைக்கு யாத்திரைச் சென்ற இளைஞர் ஒருவர், திடீர் சுகயீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என நல்லதண்ணிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வீரசேகர தெரிவித்துள்ளார்.*

*நேற்று காலை கந்தகெட்டிய பிரதேசத்தில் இருந்து சிலருடன் சிவனொளிபாதமலைக்கு வருகைத் தந்த 23 வயதான குறித்த இளைஞர், அதிகாலை சுகயீனமடைந்து மஸ்கெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.*

*கந்தகெட்டிய- மீகஹகிவுல, கரமட்டிய பகுதியைச் சேர்ந்த 23 வயதான கே. எம். ஜனித் காவிந்த இவ்வாறு உயிரிழந்தார்.*

*பிரேத பரிசோதனைக்காக சடலம் டிக்கோயா - கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.* (ஐ)

## படைப்புழுவின் தாக்கத்தால் சோள செய்கை பாதிப்பு!

*கிண்ணியா, டிசெ. 26*

*படைப்புழுவின் தாக்கம் காரணமாக சோளச் செய்கையாளர்கள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.*

*கிண்ணியா பிரதேசத்தில் கற்குழி, வட்டமடு, பனிச்சங்குளம், குரங்குபாஞ்சான் உட்பட பல பகுதிகளிலும் தற்போது சோளக்கதிர் அறுவடை இடம்பெற்று வருகிறது.*

*இந்நிலையில் ஒரு வகை படைப்புழு இனத்தின் தாக்கம் அதிகரிப்பதால் விளைச்சல் குறைந்து காணப்படுவதாகவும், இதனால் பெரும் நஷ்டத்தை தாம் எதிர்நோக்கியுள்ளதாகவும் சோளப் பயிர்ச்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.*

*அத்தோடு பல இலட்சம் ரூபாய் செலவு செய்து, சோளச் செய்கை மேற்கொண்டிருந்த போதும், உரிய விளைச்சல் கிடைக்காமல் இருப்பதற்கு பசளை தட்டுப்பாடு, படைப் புழுவின் தாக்கம் போன்றனவே காரணம் எனவும் கூறுகின்றனர்.* (ஐ)

# முதல்வர் கிண்ண சதுரங்கம் மீண்டும் ஆரம்பிக்க தீர்மானம்!

## *யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு*


*யாழ்ப்பாணம், டிசெ. 26*

*யாழ். மாநகர சபையால் நடத்தப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்ட முதல்வர் கிண்ண சதுரங்கச் சுற்றுப் போட்டி மீண்டும் எதிர்வரும் 30,31ஆம் திகதிகளிலும் ஜனவரி முதலாம் திகதியும் நடத்ததீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனத்தின் அனுமதியோடும் ஒத்துழைப்போடும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ண் தெரிவித்துள்ளார். .*

*மிகுதி விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.* (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 26 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மார்கழி 11
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
உங்கள் முயற்சி வெற்றியாகும்.மற்றவர்களால் செய்ய முடியாத ஒரு செயலை செய்து முடிப்பீர்கள். தொழிலில் ஏற்பட்ட தடைகளை சரிசெய்வீர்கள். வருவாய் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**இடபம்**
எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும்.குடும்பத்தில் உண்டான பிரச்சினைகளை சரி செய்வீர்கள். புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். செல்வாக்கு அதிகரிக்கும்.

**மிதுனம்**
செயல்களில் விழிப்புணர்வு வேண்டும். எதிர்பார்த்த ஒன்று இழுபறியாகும். முயற்சி நிறைவேறாமல் போகும்.செயல்களில் நிதானம் தேவை. யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**கடகம்**
விரும்பியதை அடைவீர்கள். ஒரு சிலர் வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி காண்பீர்கள். எதிர்பாராத ஆதாயம் வந்து சேரும். நிதிநிலை உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்**
வெளி வட்டாரத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். இழுபறியான விவகாரம் சாதகமாகும். புதிய முயற்சி நிறைவேறும்.செயல்களில் ஆதாய நிலை உண்டாகும்.

**கன்னி**
எதிர்பார்த்த வரவு வந்து சேரும். குடும்பத்திற்காக சேமிப்பை ஏற்படுத்துவீர்கள். கடன்களை அடைப்பீர்கள். உறவினர்கள் ஆதரவுடன் குடும்பத்தில் நன்மைகள் உண்டாகும். வருமானம் உயரும்.

**துலாம்**
அலைச்சல் அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலையில் கூடுதல் கவனம் செலுத்துவது நன்மையாகும். வழக்கமான செயல்களும் இன்று இழுபறியாகும். பண வரவில் தடையுண்டாகும்.

**விருட்சிகம்**
உங்கள் முயற்சி வெற்றியாகும்.நீங்கள் எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். சொத்து சேர்க்கையில் கவனம் செல்லும். உங்கள் செல்வாக்கு உயரும். வருமானத்தில் இருந்த தடை விலகும்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் செயலை மற்றவர்கள் பாராட்டுவர். நினைத்ததை அடைவீர்கள்.எதிர்காலம் குறித்த சிந்தனை அதிகரிக்கும். வியாபாரத்தில் புதிய முயற்சி மேற்கொள்வீர்கள்.

**மகரம்**
வேலை பளு அதிகரிக்கும். அலைச்சல் உண்டாகும். செயல்களில் கவனம் அவசியம். அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள். குடும்பத்தினருடன் மனஸ்தாபம் ஏற்படும். எதிர்பார்த்த வரவு தாமதமாகும்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். அலைச்சல் அதிகரிக்கும்.வரவு செலவில் கவனம் தேவை. எளிதில் நிறைவேறும் என்று நீங்கள் நினைத்த செயல் ஒன்று இழுபறியாகும்.

**மீனம்**
மற்றவர் விரும்பும் வகையில் உங்கள் செயல்பாடுகள் இருக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும். உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். நீங்கள் நினைத்தவை நடந்தேறும். வருமானம் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். நிதிநிலை உயரும்.

# தி.மு.க. கட்சியை வேரோடும் மண்ணோடும் வீழ்த்துவோம்!

## அ. தி. மு. கவினர் சபதம்

சென்னை, டிசெ. 26

தி. மு. கவை வேரோடும், மண்ணோடும் வீழ்த்திக் காட்டுவோம் என்று எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ. தி. மு. கவினர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். நினைவு தினமான நேற்று முன்தினம் அவரின் சமாதி அமைந்துள்ள இடத்தில் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தியபோதே அவர்கள் இந்த உறுதிமொழியை ஏற்றனர்.

அந்த உறுதிமொழியில்,"ஏழை எளிய அடித்தட்டு மக்களை காக்கின்ற மகத்தான மக்கள் இயக்கம் அ. தி. மு. க. இந்த மாபெரும் மக்கள் இயக்கத்தை நமக்குத் தந்த எம். ஜி. ஆரின் புகழை, எந்நாளும் காப்போம் என உளமார உறுதி ஏற்கிறோம்.

குடும்ப அரசியலின் மொத்த வடிவம் தி. மு. க. அந்த தி. மு. கவை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்திக் காட்டுவோம்! மக்கள் சக்தியாம், எம். ஜி. ஆரின் துணை கொண்டு, அவர் வகுத்துத் தந்த பாதையில், வீறுநடை போடுவோம், வெற்றிநடை போடுவோம். புதிய வரலாறு படைப்போம் என்று உறுதி ஏற்கிறோம்!

அள்ளிக் கொடுத்த நம் தலைவர், வீரம் சொல்லித் தந்த நம் தலைவர், தி. மு. க-வை வீழ்த்துவதில், வெற்றி கண்ட நம் தலைவர், அவர் காட்டிய பாதையில், தி. மு. க-வை வீழ்த்துவோம் என்று உளமார உறுதி ஏற்கிறோம். தி. மு. கவை வீழ்த்த, நேர்மை என்ற வாளெடுத்தார், மக்கள் சக்தி என்ற வேலெடுத்தார், ஜெயலலிதா என்கிற வீரமங்கையை, தமிழக மக்களுக்கு எம். ஜி. ஆர் தந்திட்டார். எம். ஜி. ஆர். காட்டிய பாதையில், ஜெயலலிதாவின் வழிநடந்து பாராளுமன்றத் தேர்தலில், 40 தொகுதிகளிலும், வெற்றி கொள்வோம் என்று உறுதி ஏற்கிறோம் - என்றனர்.

# மருத்துவக் கல்வியை தமிழ்நாட்டில் தமிழ் மொழியில் வழங்க வேண்டும்!

## மத்திய நிதி அமைச்சர் நிர்மலா

சென்னை, டிசெ. 26

தமிழை நேசிக்கும் தமிழர்கள் உள்ள தமிழ்நாட்டில் மருத்துவ கல்வியை தமிழில் வழங்க வேண்டும் என மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியுள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தில் தமிழக ஆளுநர் தலைமையில் 35ஆவது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கொரோனா ஊரடங்கு காலத்தில் மருத்துவ துறையின் பணி மிகச்சிறப்பானது. பிரதமரின் முயற்சியால் கொரோனா கட்டுப் படுத்தப்பட்டது. மருத்துவ கல்வியும், மருத்துவத்துறையும் இந்தியாவில் வளர்ச்சி அடைந்துள்ளது. சீனா, ஜப்பான் நாடுகளை விட தடுப்பூசி செலுத்துவதில் இந்தியா சிறந்து விளங்குகிறது.இந்திய அரசு அறிவியல் பூர்வமாக சமூக பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முயற்சி செய்துவருகிறது.

உலக அளவில் மருத்துவ பொருட்கள் உற்பத்தியின் மையமாக இந்தியா திகழ்கிறது என்ற அவர், மருத்துவ துறையில் தமிழ்மொழியில் கல்வி வழங்க வேண்டும் எனவும் தமிழை நேசிக்கும் தமிழர்கள் உள்ள தமிழ் நாட்டில் மருத்துவ கல்வியை தமிழில் வழங்க வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# மண் மொழி மக்கள் காக்க எனது பங்களிப்பு இருக்கும்!

## கமல் ஹாசன் தெரிவிப்பு

சென்னை, டிசெ. 26

“மண் மொழி மக்கள் காக்க ஓர் இந்தியக் குடிமகனாக என் பங்களிப்பு எப்போதும் இருக்கும்” என்று டில்லியில் நடைபெறும் இந்திய ஒற்றுமை யாத்திரையில் பங்கேற்பது குறித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், “இந்தியாவின் பன்மைத்துவத்தைப் பாதுகாக்க அன்பு சகோதரர் ராகுல் காந்தி முன்னெடுக்கும் பாரத் ஜோடோ ஒற்றுமை யாத்திரையில் நானும், மய்யம் நிர்வாகிகளும் கலந்து கொள்கிறோம். மண் மொழி மக்கள் காக்க ஓர் இந்தியக் குடிமகனாக என் பங்களிப்பு எப்போதும் இருக்கும்.ஜெய் ஹிந்த்!” என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, கடந்த செப்ரெம்பர் 7ஆம் திகதி ராகுல் காந்தி தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய ஒற்றுமை யாத்திரையை தொடங்கினார். இந்த யாத்திரை தமிழகம், கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலங்கானா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், ஹரியானா மாநிலங்களைக் கடந்து நேற்று முன்தினம் டில்லிக்குள் நுழைந்துள்ளது. இந்த யாத்திரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழகம் முழுவதும் நத்தார் கொண்டாட்டம்!



சென்னை, டிசெ. 26

தமிழகம் முழுவதும் கிறிஸ்தவர்களின் பண்டிகையான கிறிஸ்துமஸ் விழா நேற்று உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

உலகம் முழுவதும் டிசெம்பர் 25ஆம் திகதி கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விதமாக கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. கடந்த 2 வருடங்களாக கொரோனா தொற்று பரவலின் காரணமாக கிறிஸ்துமஸ் பண்டிகையை கிறிஸ்தவர்களால் சிறப்பாக கொண்டாட முடியாத நிலை இருந்தது.

இந்த ஆண்டு கொரோனா பரவல் முற்றிலும் கட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து கிறிஸ்துமஸ் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுவதற்கான முன்னேற்பாட்டு பணிகளில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இந்த ஆண்டுக்கான கிறிஸ்துமஸ் பண்டிகை தமிழகம் முழுவதும் நேற்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இதன்படி கிறிஸ்தவர்களின் வீடுகள், ஆலயங்கள் ஆகியவற்றை வண்ண, வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு, பலவண்ண, பலவிதமான ஸ்ரார்களை தோரணங்களாக அமைத்து, ஏசு கிறிஸ்துவின் பிறப்பை குறிக்கும் விதமாக சிறிய குடில்கள் முதல் ராட்சத குடில்கள் வரை அமைக்கப்பட்டிருந்தது.

நள்ளிரவு முதலே தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் ஏராளமானோர் குடும்பங்களுடன் பங்கேற்றனர். (ஐ)

# செபஸ்தியார் பேராலயத்தில் கிறிஸ்து பிறப்பு திருப்பலி!





மன்னார், டிசெ. 26

மனிதத்தை உலகுக்கு வெளிப்படுத்திய இயேசு பிரானின் அவதாரத்தை சிறப்பிக்கும் கிறிஸ்மஸ் பிறப்பு திருப்பலி ஞாயிறு நள்ளிரவு மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டத்தின் பிரதான கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி மாவட்டத்தின் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

இதன்போது இயேசு பிறப்பை குறிக்கும் வகையில் நள்ளிரவு பாலன் திருச்சொரூபம் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிறிஸ்மஸ் ஆராதனைகள் நடைபெற்றன. பின்னர், கிறிஸ்மஸ் விசேட கூட்டுத் திருப்பலியை ஆயர், அருட்தந்தையர்கள், இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

மேலும், "இந்த காலகட்டத்தில் இலங்கையில் இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியின் போது எமது மக்கள் துன்பப்படுகிறார்கள். விலைவாசி அதிகரித்து இருக்கும் வேளையில் எத்தனையோ பொருட்களை வாங்க முடியாத நிலையிலும் சில பொருட்களை எப்படியும் தேடிக் கொள்ள இயலாத நிலையில் சில வீடுகளிலே ஒருவேளைகூட சாப்பிட இல்லாமல் பட்டினியாக இருக்கிறார்கள்.

"இவர்களுக்கு இயேசுவின் பிறப்பு ஒரு மீட்பின் நிறைவாக இருந்து அதிலிருந்து அவர்களை சூழ இருக்கும் இந்த இருள் அகற்றப்பட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ பிறக்கும் இயேசு எமக்கு உதவி புரிவார் என்று நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்.

இயேசுநாதர் பிறந்தது ஒரு மாட்டு தொழுவத்தில். அவர் பிறக்கும் போது அவருக்கு பெரிய மாளிகை இருக்க வில்லை. ஒரு பெரிய வீட்டில் கூட அவர் பிறக்கவில்லை. ஒரு மாட்டுத் தொழுவத்தில் ஓர் ஏழையாகத் தான் அவர் பிறந் தார். ஆகையால்தான் அவர் ஏழைகளுக்கும் வறியோருக்கும் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கும் அருகில் இருந்து அவர்களுக்கு பல உதவிகளை செய்து வருகிறார்.

அந்த நம்பிக்கையில் மக்கள் தங்களுடைய கஷ்டதுக்கங்களில் இருந்து விடுபட இயேசுநாதரின் பிறப்பு ஒரு சிறந்த வழியாக அமைய வேண்டும் என்று நாங்கள் பிரார்த்திக்கிறோம் என ஆயர் தனது உரையில் தெரிவித்தார்.

திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதை தொடர்ந்து அனைவருக்கும் ஆயர் மற்றும் அருட்தந்தையர்களால் அருளாசி வழங்கப்பட்டது. கிறிஸ்மஸ் ஆராதனையை முன்னிட்டு தேவாலயத்தில் பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.

இதன் போது மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் நள்ளிரவுத் திருப்பலியில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பகிர்ந்து அளித்து வாழ்ந்தால் கடன் வாங்கத் தேவையில்லை!

## ஆராதனை செய்தியில் யாழ். ஆயர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

**பகிர்ந்தளித்து வாழ்ந்தால் வேறு யாரிடமும் கடன் வாங்க தேவையில்லை என்று யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.**

நேற்று நள்ளிரவு யாழ். மரியன்னை ஆலய பெற்ற யேசு பிறப்பு விசேட திருப்பலி ஒப்புக்கொடுத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வசதி படைத்தவர்கள் தம்மிடம் உள்ள பணத்தினை வறியவர்களுக்கு பகிர்ந்தால் நாங்கள் வேறு எவரிடமும் கடன் வாங்க தேவையில்லை. வசதி படைத்தவர்கள் செல்வந்தவர்கள் தம்மிடமுள்ள பணத்தை பகிர்ந்தளித்தால் அனைவரும் சந்தோஷமாக வாழலாம். ஆனால், இந்த நாட்டில் அவ்வாறான நிலை இல்லை. இன்று நாடு இவ்வாறான நிலைக்கு செல்வதற்கு காரணம் இவ்வாறான ஒரு நிலை தான்.

ஒரு மனிதன் ஏழைகளுக்கு உணவளித்து தன்னிடம்



உள்ளவற்றை இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளித்து வாழ்ந்தாலே அது சிறந்த வாழ்க்கையாகும். கிறிஸ்து இயேசு பிறப்பு தினத்திலாவது நாங்கள் பகிர்ந்து அளித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். ஏழை எளியவர்களுக்கு உணவளித்து வாழ பழகிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு வாழ்ந்தால் எமது நாடு முன்னேற்றம் அடையும். எனவே இந்த இயேசு கிறிஸ்து பிறப்பு தினத்தில் நாங்கள் பகிர்ந்து உண்டு வாழ்வதற்கு கட்டாயமாக முயற்சிக்க வேண்டும். நாங்கள் எங்களைப் பற்றி மாத்திரமே சிந்திக்கின்றோம். மற்றவர்களை பற்றி சிந்திப்பதில்லை. எமது வாழ்க்கை முறையினை கட்டாயமாக மாற்ற வேண்டும்.

நாங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமாக இருந்தால் கட்டாயமாக பகிர்ந்தளித்துவாழ்ந்தால் மாத்திரமே மகிழ்ச்சியாக வாழ முடியும். நாங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும். மற்றவர்களுக்கு உடை உரையில் போன்ற ஏனைய விடயங்கள் தொடர்பிலும் நாங்கள் மற்றவர்களுக்கு உதவ முன் வர வேண்டும் - என்றார். (ஐ)

# வீதியில் உயிருக்கு போராடிய இருவர் மருத்துவமனையில்!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிசெ. 26

பலத்த காயங்களால் உயிருக்கு போராடிய நிலையில் மீட்கப்பட்ட இருவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோமரசங்குளம் பகுதியில் விவசாய பண்ணைக்கு அருகே இவர்கள் இருவரும் மீட்கப்பட்டனர்.

வீதியில் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடியவரை அப்பகுதியால் வந்த பாராளுமன்ற உறுப்பினர் க. திலீபன் கண்டு, நோயாளர் காவு வண்டியின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது மருத்துவ மனையில் சேர்ப்பித்தார்.

இதேசமயம் அதே பகுதியில் காயங்களுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்ட மற்றொருவரும் மருத்துவமனையில் நோயாளர் காவு வண்டி மூலம் சேர்க்கப்பட்டனர்.

போத்தல்களால் குத்தப்பட்டே இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், மீட்கப்பட்டவர்கள் 50, 53 வயதுடையவர்கள் என்றும் பொலிஸாரின் முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

மேலதிக விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யாழ்ப்பாணம் பெரியகோயிலில் கிறிஸ்மஸ் ஆராதனை!











யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் பிரதான நத்தார் நள்ளிரவு திருப்பலி யாழ். புனித மரியன்னை ஆலயத்தில் ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டு சிறப்பு ஆராதனை இடம்பெற்றபோது...!

**(படங்கள் - ஜ. சிவசாந்தன்)**

# வெளிநாட்டு மத்தியஸ்தம் இல்லாமல் அரசுடன் பேசுவதில் அர்த்தம் இல்லை!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி. தெரிவிப்பு

மன்னார், டிசெ. 26

**இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஏதாவது ஒரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதில் எந்த பலனும் இல்லை. இது வெறுமனே காலத்தை கடத்தும் செயல்பாடு என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

- மன்னாரில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை நோக்கிய அறிவிப்பை அல்லது முன்மொழிவை அவர் பல இடங்க ளில் கூறியிருக்கிறார். அவர் கூறுவதற்கு சர்வதேச நாடுகளுடைய அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.

ஏனென்றால், இன்று இலங்கையில் ஏற்பட்டு இருக்கின்ற பொருளாதார நெருக்கடியை சர்வதேச நாடுகளுடைய உதவி இல்லாமல் இலங்கையால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாது.

ஆகவே, சர்வதேச நாடுகளை திருப்திப்படுத்துவதற்கு நாட்டின் ஜனாதிபதி இந்த முன்மொழிவை முன் வைக்கக் கூடும்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையில் முதலில் தமிழ் கட்சிகள், வடக்கு - கிழக்கில் இருக்கின்ற மதத் தலைவர்கள் ஓர் இணக்கப்பாட்டுக்கு



வரவேண்டும்.

ஒவ்வொருவரும் வரைவு தொடர்பாக தீர்வு திட்டம் தொடர்பாக ஒவ்வொரு விதமாக கதைப்பது என்பது அவர்களின் கட்சிகள் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று கதைக்கின்றார்களோ தெரியாது.

என்னைப் பொறுத்தவரையில் தமிழர்களுடைய தீர்வு என்பது ஒட்டுமொத்த கட்சிகளும் முதலில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இணக்கப்பாட்டுக்கு வந்ததன் பிற்பாடு அரசியல் யாப்பில் எப்படிப்பட்ட மாற்றங்கள் கொண்டு வந்தால் தமிழர்கள் இறைமையுடன் வாழ முடியும் என்ற ஒரு வரைபுக்கு வர வேண்டும்.

ஏனெனில், 1948 ஆம் ஆண்டிலிருந்து ஆட்சியாளர்களுடன் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. அவை கிழிக்கப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தங்கள் கூட முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவில்லை.

ஆகவே, வெறுமனே இலங்கை அரசாங்கத்துடன் பேசி தமிழ் மக்களுக்கு உரிய தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

குறிப்பாக, சர்வதேச நாடுகளுடைய மத்தியஸ்தம் - இந்தியா, அமெரிக்கா அல்லது பிரித்தானியா இந்த மூன்று நாடுகளைச் சார்ந்த ஏதோ ஒரு நாட்டின் மத்தியஸ்தம் இல்லாமல் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவது என்பது காலத்தை கடத்துகின்ற செயலாகத்தான் இருக்கும்.

அந்த பேச்சின் மூலம் தமிழ் மக்களுக்கு உரிய இறைமை உடன் வாழக்கூடிய தீர்வு வரும் என்பது எனக்கு நம்பிக்கை இல்லை - என்றார்.

(ஐ)

## உள்ளூராட்சி சபைகள் தேர்தல்:

# தனித்தும் கூட்டாகவும் போட்டியிட ஐ. தே. கவும் பெரமுனவும் தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 26

ஐக்கிய தேசியக் கட்சி சாதகமான தொகுதிகளில் தனித்தும் பாதகமான தொகுதிகளில் பெரமுனவுடனும் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்தப்பட வேண்டிய நிலை உருவானால், அதில் எவ்வாறு போட்டியிடுவது என்பது தொடர்பில் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொது ஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் குறுகிய உரையாடல் இடம் பெற்றுள்ளது.

இதில்,

ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான கொழும்பு, காலி, பண்டாரவளை, நுவரெலியா போன்ற 10 மாநகர சபைகளில் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடத் தயார் எனவும், ஏனைய உள்ளூராட்சி சபைகளில் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சி தயார் என்றும் பசிலுக்கு ஜனாதிபதி ரணில் யோசனையை முன் வைத்துள்ளார்.

இதற்கு பொதுஜன பெரமுன ஆதரவு தெரிவித்துள்ளது என்றும் தெரிய வருகின்றது. (ஐ-சி)

# வவுனியா சிறையிலிருந்து ஆறு கைதிகள் விடுதலை!

வவுனியா, டிசெ. 26

நத்தார் பண்டிகை தினமான நேற்று வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்ட்டிருந்த 6 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ், நாடளாவிய ரீதியில் 309 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் வவுனியாவில் ஆறு பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்ற சிறு குற்றங்களுக்காக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் குறித்த கைதிகளுக்கு ஆலோசனை வழங்கி, கைலாகு கொடுத்து அவர்களை விடுதலை செய்து வழி அனுப்பி வைத்தனர்.

(ஐ)

# மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

புத்தளம், டிசெ. 26

புத்தளம் பாலாவி பகுதியில் உள்ள வீடொன்றில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்தார்.

சமைத்துக்கொண்டிருந்த வேளை வெளிச்சம் போதாமையால் மின்குமிழை பொருத்துவதற்கு முற்பட்ட வேளையிலேயே மின்சாரம் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தினமான நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புத்தளம் தில்லையடியை சேர்ந்த 47 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

(ஐ)



# ரூ. 2 கோடி பெறுமதியான போதைப் பொருள் மீட்பு!

கொழும்பு, டிசெ. 26

விளையாட்டுப் பொருட்களுக்குள் மிகவும் சூட்சுமமாக மறைத்து அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்தப் பொதியை எடுத்துச் செல்ல வந்த சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், கொழும்பு 14 ஐச் சேர்ந்த 44 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் மேலதிக விசாரணைகளுக்காக போதைப் பொருள் தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# யாழில் மூட நம்பிக்கையால் குழந்தையின் உயிர் போனது!

யாழ்ப்பாணம், டிசெ. 26

குழந்தையின் வயிற்றோட்டத்தை நிறுத்த, பெற்றோர் ஆலயத்தில் நூல் கட்டி காத்திருந்தமையால் குழந்தை உயிரிழந்தது.

நாவாந்துறையை சேர்ந்த 8 மாத குழந்தையே இவ்வாறு உயிரிழந்தது.

குழந்தை கடந்த வியாழக்கிழமை வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. அதனையடுத்து பெற்றோர் குழந்தையை அருகில் உள்ள ஆலயமொன்றுக்கு தூக்கிச் சென்று, பூஜை செய்து, நூல் கட்டியுள்ளனர்.

குழந்தை தொடர்ந்தும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டது. இதையடுத்து மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை குழந்தையை சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். ஆனால், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.

அதனை தொடர்ந்து நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற குழந்தையின் மரண விசாரணையின் பின்னர், வயிற்றோட்டம் காரணமாக அதிகளவு நீரிழப்பு ஏற்பட்டே குழந்தை உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

(ஐ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

# கண்டி மாவட்டத்தில் 143 எய்ட்ஸ் நோயாளர்



கண்டி, டிசெ. 26

கண்டி மாவட்டத்தில் 143 பேர் எச்.ஐ.வி. தொற்று காரணமாக தொடர்ந்து மருத்துவ சேவையைப் பெற்று வருகின்றனர் என்று மாவட்டத்தின் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு மருத்துவர் எம். ஐ. எம். லரீப் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடந்த எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும்,

கண்டி மாவட்டத்தில் ஒப்பீட்டளவில் மேற்படி எய்ட்ஸ் தொற்று அதிகரித்து வருகிறது. 1991ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, கண்டி மாவட்டத்தில் 268 பேர் எச். ஐ. வி. தொற்றாளர்கள் பதிவாகினர். இதில் 143 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். மிகுதிப் பேர் இடம் பெயர்ந்திருக்கலாம் அல்லது உயிரிழந்திருக்கலாம்.

2021ஆம் ஆண்டு 20 தொற்றாளர்கள் புதிதாக இனங்காணப்பட்டனர். 2022ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மட்டும் 15 பேர் புதிதாக இனங்காணப்பட்டனர். அவர்கள் அனைவரும் 24 முதல் 40 வரையான வயதுப் பிரிவினர் ஆவர்.

2021ஆம் ஆண்டு இனங்காணப்பட்ட 20 பேரில் 17 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் ஆவர். கண்டியில் இதுவரை சிகிச்சை பெற்று வருபவர்களில் 15 வயதிலும் குறைவானவர்களாக 13 பேர் உள்ளனர்.

எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களில் அதிக மானவர்கள் முறையற்ற பாலியல் தொடர்பு காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். அவர்களில் அனேகர் போதைக்கு அடிமையானவர்கள். மேலும், இந்த தொற்றால் பாதிக்கப்பட்ட ஆண்களின் மனைவிமார்களும் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, எய்ட்ஸ் பற்றி ஏதேனும் சந்தேகம் உள்ளவர்கள் கண்டி வைத்திய சாலையில் உள்ள பாலியல் தொற்று நோய் தொடர்பான சிகிச்சை பிரிவுக்கு சமுகமளித்து ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரம்ப கட்டத்திலேயே இந்த நோய் கண்டு பிடிக்கப்பட்டால், அது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தாது என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொழும்பு துறைமுக நகரத்தில் 80,000 பேரை குடியமர்த்த திட்டம்!

கொழும்பு, டிசெ. 26

கொழும்பு துறைமுக நகரில் புதிய 80 ஆயிரம் குடியிருப்பாளர்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் என்று அந்த துறைமுக நகரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் வெளிநாட்டவர்கள் அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

துறைமுக நகரில் உள்ள அடுக்கு மாடி குடியிருப்புக்களில் வசிக்க வரும் வெளிநாட்டவர்களுக்கு 10 ஆண்டு குடியிருப்பு வீசா வழங்க அரசு ஏற்கனவே முடிவு செய்துள்ளது.

துறைமுக நகரின் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் துறைமுக நகரத்துக்கு புதிய தொகுதிகூட உருவாக்கப்படலாம் என்று முதலீட்டாளர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-சி)

# பொது பயன்பாடு குழு தலைவரும் மின்சக்தி அமைச்சரும் மோதலில்!

கொழும்பு, டிசெ. 26

மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத் நாயக்கவுக்கும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கும் இடையே கருத்து மோதல் வெடித் துள்ளது.

வரும், ஜனவரி 2ஆம் திகதிக்குள் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது குறித்து அமைச்சரவைக்கு விரிவான அறிக்கையை வழங்குவோம். இதன்பிரகாரம் மின்சார கட்டணம் திருத்தப்படும் என்று அமைச்சர் கூறினார்.

அத்துடன், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தனது தனிப்பட்ட கருத்துக்கு அமைவாக செயல்படுகிறார். அரசியல் தொடர்புகளை வெளிப்படுத்துகிறார் என்றும் அமைச்சர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

ஆனால், எவரும் சட்டத்துக்கு புறம்பாக சென்று மின்சார கட்டணத்தை அதிகரிக்க முடியாது என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத் நாயக்க மீண்டும் கூறினார். மேலும்,

"அடுத்த மாதம் மின்சார கட்டணத்தை திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், நாங்கள் அந்தத் திட்டத்தை முன் வைக்க வேண்டும். டிசெம்பர் 22 வரை எங்களுக்கு அத்தகைய முன்மொழிவு வரவில்லை.

மாறாக, எனது தனிப்பட்ட கருத்தைக் குறிப்பிடவில்லை. ஆணைக்குழுவின் கருத்தையே குறிப்பிட்டேன். ஆணைக்குழுவின் அனுமதியின்றி மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முயற்சித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணைக் குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த இரு தரப்பாரின் அதிகார மோதல்தான் கொழும்பு அரசியலில் பிரதான பேசு பொருளாகியுள்ளது. (ஐ-சி)

# சுற்றுலா பயணத்தில் அண்ணனும் தம்பியும்!

கொழும்பு, டிசெ. 26

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் சுற்றுலா சென்றுள்ளனர் என்று அவர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுமுறையை களிக்க துபாய் சென்றுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்று அவரின் மூத்த சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவும் தனது குடும்பத்தினருடன் யால பூங்காவுக்கு சென்றுள்ளார் என்று அரசியல் வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (ஐ-சி)

# தினேஷ் ஷாப்டர் கொலை; 75 பேரிடம் சாட்சியம் பதிவு!

கொழும்பு, டிசெ. 26

இலங்கையின் பிரபல வர்த்தகரான தினேஷ் ஷாப்டர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் குடும்ப உறுப்பினர்கள் உட்பட 75 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. கொலை செய்யப்பட்ட தினேஷ் ஷாப்டரின் குடும்ப உறுப்பினர்கள் எல்லாவற்றையும் தெளிவுபடுத்தும் வகையில் ஆதாரங்களை பதிவு செய்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. இந்த விசாரணைகளின் படி சாட்சியங்களை பெற்றுக் கொண்டு மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வாரம் அறிவிக்கப்படும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, டிசெ. 26

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்ற கட்சிகளின் எண்ணிக்கை 86 மட்டுமே. இதில், சில கட்சிகளின் உயர் பதவிகள் தொடர்பில் சட்டச் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இதனிடையே, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளான சிறீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வுகளை தொடங்கியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், தமது கட்சி தலைமையகத்துக்கு கிடைக்கப்பெறும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களில் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு வேட்பாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு - என்றார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கட்சித் தலைமையகத்துக்கு வேட்பாளர்களிடம் இருந்து சுமார் மூவாயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தகுதியானவர்களிடம் இருந்து வேட்பாளர்களை தெரிவு செய்து வருகிறோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை திட்டமிட்ட நேரத்தில் நடத்த வேண்டும் என்பது தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாடு - என்றார். (ஐ-சி)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1961 - 12 - 12 |  | 2022 - 11 - 23 |

## அருளப்பு டொனாஸ் (சந்திரன்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு டொனாஸ் (சந்திரன்) அவர்கள் கடந்த 23.11.2022 அன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு - கிளாறம்மா அவர்களின் அன்பு மகனும் பெனடிற், டொமினிக், மெற்றில்டா, மேரி ஜோசேப்பின், டொனால்ட் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராணி, காலஞ்சென்ற என்சிலி மகாராஜ் (கிளி) மற்றும் லூர்து நாயகம், மேரி ராஜவதனா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜான்சன், ஜான்சி, ஜெசியன், சீலன், றீசன், ஜெனா, சாளி, றோசி, றொய்சா, ஜீவிகா ஆகியோரின் அன்பு மாமனாரும்

தோமஸ் லக்கி, றோஜர்ஸ், அன்ரன் றொனால்ட், உதயகுமார், தோமஸ் குரூஸ், யனு, விதுசா ஆகியோரின் சித்தப்பாவும் வினுஜன், றேனுசாயினி, கமாயா, நித்திக், ஏஞ்சல், ஆயன், ஆரோன், டிலூசியா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.12.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (64/3 புகையிரத மேற்கு, ஒழுங்கை) சமய ஆராதனைகள் இடம் பெற்ற பின் யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு
077 828 5375, 077 724 5207

தகவல்
குடும்பத்தினர்.

# அமெரிக்க டொலர் கையிருப்பு கரைந்தது:

## இந்திய ரூபாய் இலங்கைக்கு உதவுமா?




இலங்கையில் அமெரிக்க டொலருக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதால், இரு தரப்பு வணிகம் மேற்கொள்ள இலங்கை அரசு இந்திய ரூபாயைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

இந்திய ரூபாயில் இருதரப்பு வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை வங்கி ஒன்று பாரத ஸ்டேட் வங்கியில் வோஸ்ட்ரோ (vostro) கணக்கை திறந்துள்ளது. இலங்கைக்கான இந்திய உயர் ஆணையம் இந்த தகவலை, தமது ட்விட்டர் பதிவில் இந்த வாரம் உறுதிப்படுத்தியது.

**வோஸ்ட்ரோ கணக்கு என்றால் என்ன?**

வங்கி ஒன்று, மற்றுமொரு வங்கியின் சார்பாக வைத்திருக்கும் கணக்கு வோஸ்ட்ரோ கணக்கு என கூறப்படுகின்றது. நிதியை வைத்திருக்கும் வங்கியானது, வெளிநாட்டு கணக்கை வைத்திருக்கும் வங்கியின் பாதுகாவலராகவும் செயற்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, டொலர் கையிருப்பு கரைந்ததால் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக எரிபொருள், எரிவாயு, மருந்து பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை கூட நிறைவேற்றிக் கொள்வதில் பாரிய சிரமங்களை இலங்கை கடந்த காலங்களில் சந்தித்து வந்தது.

இந்த நிலையில், டொலர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துகொள்ளும் வகையில், சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாயை பயன்படுத்த கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை இணக்கம் தெரிவித்தது. டொலர் தட்டுப்பாடு காணப்படுகின்ற நாடுகளை, இந்திய ரூபாய் வர்த்தக தீர்வு பொறிமுறைக்கு கொண்டு வருவதற்கான வழிகளை பார்ப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்திருந்த நிலையிலேயே, இந்த வோஸ்ட்ரோ கணக்கு திறக்கப்பட்டுள்ளது.

**இலங்கைக்கு என்ன பயன்?**

வோஸ்ட்ரோ கணக்கு திறப்பதன் ஊடாக, இலங்கையிலுள்ள ஒருவர் 10,000 அமெரிக்க டொலர் பெறுமதியான இந்திய ரூபாயை வைத்திருக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தியா மற்றும் இலங்கை குடிமக்களுக்கு இடையிலான சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களின் போது, அமெரிக்க டொலருக்கு பதிலாக இந்திய ரூபாயைப் பயன்படுத்த முடியும் என கூறப்படுகின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு நட்பு நாடு என்ற வகையில், தீர்வை வழங்கும் நோக்கிலேயே இந்தியா இந்த தீர்வை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**இந்த நடைமுறை சாதகமாகுமா?**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கத்திடம் இந்த விடயம் தொடர்பில் வினவியபோது, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான கொடுக்கல் - வாங்கல்களுக்கு (ஏற்றுமதி - இறக்குமதி வணிகம்) மட்டுமே இந்த முறையை பயன்படுத்த முடியும் என அவர் கூறினார்.

சீனாவுடனான வர்த்தகத்தில், இந்திய ரூபாயில் அந்த கொடுக்கல் வாங்கல்களை செய்ய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், டொலர் கொடுக்கல் - வாங்கலானது, சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று எனவும், இந்திய ரூபாய் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணய அலகு கிடையாது எனவும் அவர் கூறுகின்றார்.


அதேபோன்று, பெருமளவிலான பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் இலங்கை, குறுகிய அளவிலான பொருட்களையே இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்கின்றது. அவ்வாறான நிலையில், இலங்கையிலிருந்து பெருமளவிலான இந்திய ரூபாய், இந்தியாவிற்கு செல்லும் எனவும், ஏற்றுமதி வருமானமாக இந்திய ரூபாய் பெருமளவு இலங்கைக்கு கிடைக்காது எனவும் அவர் கூறுகின்றார். அதனால், இலங்கையில் இந்திய ரூபாய்க்கு தட்டுப்பாடு வரக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும் அவர் கூறுகின்றார். இலங்கையில் டொலர் தட்டுப்பாடு காணப்படுகின்ற நிலையில், இந்த முறைமை சிறந்தது என்றாலும், கொடுக்கல் - வாங்கல்களின் போது, சில தடங்கல்கள் காணப்படுவதாகவும் சிரேஷ்ட பேராசிரியர் கோபாலபிள்ளை அமிர்தலிங்கம் தெரிவிக்கின்றார்.



(பிபிசி)

# வட அமெரிக்க பனிப்புயலால் பரிதவிக்கும் 25 கோடி பேர்!

## 40 ஆண்டுகளில் மோசமான கிறிஸ்துமஸ் கால குளிர்



வட அமெரிக்காவில் வீசும் பனிப் புயலால் அமெரிக்கா மற்றும் கனடாவில் சுமார் 25 கோடி பேர் பனிப்பொழிவின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். வெள்ளிக்கிழமை நிலவரப்படி, இதனால் 12 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

கடந்த 40 ஆண்டுகளில் இதுதான் மிகவும் மோசமான கிறிஸ்துமஸ் குளிர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் கொண்டாட வேறு ஊர்களுக்கு சாலை மற்றும் வான் வழியாக பயணிக்கும் கோடிக் கணக்கானவர்களின் பயணம் தடைபட்டுள்ளது.

சுமார் 20 கோடி மக்களுக்கும் மேல் வாழும், பாதிக்கும் மேலான அமெரிக்க மாகாணங்களுக்கு தீவிர வானிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

> சாலை விபத்துகள் உள்பட பனிப் புயல் தொடர்பில் பல உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன. ஒஹாயோவில் அடுத்தடுத்து 50 வாகனங்கள் மோதிக் கொண்டதில் 2 பேர் உயிரிழந்தனர். பனிக்கட்டிகளை விலக்கும் இயந்திரங்களை கையாளும் நபர்கள் பற்றாக்குறையால் போக்குவரத்துப் பிரச்னைகள் அதிகரித்துள்ளன.

மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் 15 லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெள்ளிக்கிழமை மட்டும் ஆயிரக் கணக்கான விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. டெக்சாஸ் முதல் க்விபெக் வரையில் சுமார் 3,200 கி.மீ. வரையிலும் பனிப்புயல் வீசுகிறது. வளிமண்டல அழுத்தம் திடீரென குறைந்ததால் எழுந்த பனிப்புயல், அமெரிக்கா - கனடா எல்லையில் உள்ள ஏரிகளை உறையச் செய்துள்ளது.

கனடாவில் ஆண்டேரியோ மற்றும் க்விபெக் மாகாணங்களில் ஆர்க்டிக் பனிப்பொழிவின் விளைவாக லட்சக் கணக்கான வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பிரிட்டிஷ் கொலம்பியா முதல் நியூ பவுண்ட்லேண்ட் வரையிலான கனடாவின் பெரும்பாலான பகுதிகள் கடுங்குளிர் மற்றும் பனிப்புயல் எச்சரிக்கையின் கீழ் இருந்தன. வெள்ளிக்கிழமை வானிலை வரைபடம் ‘மிக மோசமான குளிர் கால வானிலை எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களை சித்தரிக்கிறது” என்று அமெரிக்க தேசிய வானிலை சேவை அமைப்பு கூறியுள்ளது.

மொன்டானாவின் எல்க் பூங்காவில் வெப்பநிலை -50 எவ். (-45ஊ) ஆகக் குறைந்துள்ளது, மிச்சிகனில் உள்ள ஹெல் நகரம் உறைந்துவிட்டது.

தெற்கு டகோட்டாவில் வசிக்கும் அமெரிக்க பழங்குடியினர் எரிபொருள் தீர்ந்த பிறகு, வெப்பமூட்டுவதற்காக ஆடைகளை எரித்ததாக பழங்குடி அதிகாரிகள் தெரிவித்தனர். பென்சில்வேனியா, மிஷிகன் மாகாணங்களில் கடும் பனிப்பொழிவு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. நியூயார்க்கில் உள்ள பஃபல்லோ பகுதியில், குறைந்தபட்சம் 89 செ.மீ. அளவுக்கு பனிப்பொழிவு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

80 லட்சத்திற்கும் அதிகமானோர் பனிப்புயல் எச்சரிக்கையின் கீழ் இருப்பதாக அமெரிக்க தேசிய வானிலை சேவை தெரிவித்துள்ளது. நியூ இங்கிலாந்து, நியூயார்க், நியூ ஜெர்சி பிராந்தியங்களின் கடலோரங்களில் கடுமையான வெள்ளம் காணப்படுகிறது.

பசிஃபிக் வடமேற்கில், சியாட்டில், போர்ட்லேண்ட் பகுதிகளில் உறைந்த தெருக்களில் சிலர் பனிச்சறுக்கு விளையாடினர். வழக்கமாக அதிகமான பனிப்பொழிவை எதிர்கொள்ளாத லூசியானா, அலபாமா, ஃப்ளோரிடா, ஜோர்ஜா ஆகிய தென் மாகாணங்களுக்கும் கடுமையான உறைபனி எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

சாலை விபத்துகள் உள்பட பனிப் புயல் தொடர்பில் பல உயிரிழப்புகள் நேரிட்டுள்ளன. ஒஹாயோவில் அடுத்தடுத்து 50 வாகனங்கள் மோதிக் கொண்டதில் 2 பேர் உயிரிழந்தனர்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



# 'நாய்க்கு பாலியல் துன்புறுத்தல்'

## இலங்கை ஜனாதிபதியின் முன்னாள் ஆலோசகர் மீது புகார்

தமது முன்னாள் காதலியின் நாயை பாலியல் ரீதியாக துன்புறுத்தியதாக இலங்கை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகராக நேற்று வரை பதவி வகித்தவருமான பேராசிரியர் ஆஷு மாரசிங்க மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பாக காணொளி மற்றும் படங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் பிரிவின் தேசிய அமைப்பாளருமான ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் ஆஷு மாரசிங்கவின் முன்னாள் காதலி ஆதர்ஷா கரந்தனா ஆகியோர் வெளியிட்ட காணொளி உண்மையானதல்ல என்றும் அது எடிட் செய்யப்பட்டது என்றும் ஆஷு மாரசிங்கவின் வழக்குரைஞர் தெரிவித்துள்ளார்.

ஹிருணிகா பிரேமசந்திர மற்றும் ஆதர்ஷா கரந்தனா ஆகியோர் வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் ஆஷு மாரசிங்க மீது மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

ஆஷு மாரசிங்கவுக்கு எதிரான இந்த ஊடக சந்திப்பு நடைபெறுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னர், 'ஜனாதிபதியின் ஆலோசகர்' எனும் பதவியை ஆஷு மாரசிங்க ராஜிநாமா செய்தார்.

'இந்தப் பொய்யான நிகழ்வு இப்போது நீதிமன்றத்தின் கையில் உள்ளது. எனவே இது குறித்து நான் மேற்கொண்டு எதுவும் சொல்லப்போவதில்லை" என்று ஆஷு மாரசிங்க கூறியுள்ளார்.

'எனது கட்சிக்காரர் ஆஷு மாரசிங்க தொடர்பான ஓர் அருவருக்கத்தக்க, போலியான காணொளி உலவுகி



றது," என்று ஆஷு மாரசிங்க வின் வழக்குரைஞர் பிரவி கருணாரத்ன கூறியுள்ளார்.

'குறிப்பிட்ட செய்தியாளர் சந்திப்புக்கு முன்னரே எனது கட்சிக்காரர் இந்த அச்சுறுத்தல் குறித்து சி.ஐ.டி-யிடம் புகாரளித்துள்ளார். எனது கட்சிக்காரரும் ஒரு பெண்ணும் இயக்குநராக ஒரு நிறுவனத்தில் இருக்கிறார்கள். அதில் நிலவும் பிரச்னையைத் தீர்க்க அவரிடம் பெரும் தொகை கேட்கப்பட்டது" என்று கூறியுள்ள அவர் சி.ஐ.டி-யிடம் ஆஷு மாரசிங்க வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

### 'ரகசியமாகப் பதிவு செய்யப்பட்ட' காணொளி

ஆஷு மாரசிங்க நாய் ஒன்றை பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு உள்ளாக்குவது போன்ற படங்கள் மற்றும் வீடியோக்களையும் அவர்கள் அந்த செய்தியாளர் சந்திப்பில் காண்பித்தனர். எனினும், அந்தப் படங்கள் மற்றும் காணொளிகள் உண்மைத் தன்மையை சுயாதீனமாக உறுதிசெய்ய முடியவில்லை.

ஆஷு மாரசிங்கவுடன் சில காலம் ஒரே வீட்டில் வாழ்ந்த அவரின் முன்னாள் காதலி ஆதர்ஷா கரந்தனா, ஆஷு மாரசிங்கவின் மேற்படி நடத்தையை தனது கைப்பேசியில் ரகசியமாக ஒளிப்பதிவு செய்தாக இதன்போது விவரித்தார். ஆதர்ஷா செல்லமாக வளர்த்து வந்த நாயுடனேயே, ஆஷு மாரசிங்க இவ்வாறு பாலியல் உறவு வைத்துக் கொண்டதாக குற்றஞ் சாட்டப்படுகிறது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா, ஊடகவியலாளர் களுக்கு காண்பித்த படங்களில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷு மாரசிங்க நாயிடம் பாலியல் ரீதியாகத் தவறாக நடந்து கொள்வது போன்ற காட்சி பதிவாகியி ருந்தது.

இந்தக் குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கான வீடியோக்கள் தம்மிடம் நான்கு ஹார்ட் டிஸ்கில் உள்ளன என்றும் ஹிருணிகா பிரேமசந்திர கூறினார்.

'நாட்டின் ஜனாதிபதியினுடைய அரசியல் ஆலோசகர்தான் இவ்வாறு நடந்துள்ளார். நாட்டின் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின்படி, 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக் கூடிய குற்றமாக இது உள்ளது. வாய்பேச முடியாத அப்பாவி விலங்குகளை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்கின்றமை - ஒரு வகை மன நோயாகும். நாட்டின் ஜனாதிபதியினுடைய ஆலோசகரின் மனநிலை இப்படியிருந்தால், ஜனாதிபதியின் மனநிலை எப்படியிருக்கும் என யோசித்துப் பாருங்கள்" என, இதன்போது ஹிருணிகா குறிப்பிட்டார். இதே வேளை, இச்சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார் என்றும் அவர் கேள்வியெழுப்பினார்."

இந்த சம்பவத்தை அடுத்து அவர் பதவி விலகியுள்ளார் என்பது ஒரு விடயமல்ல. இச்சம்பவம் தொடர்பாக அவருக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியிடம் நான் கேட்க விரும்புகிறேன்" என்றார் ஹிருணிகா பிரேமசந்திர.

### படுக்கையறையில் ரகசியமாக வைக்கப்பட்ட கைப்பேசி

ஆஷு மாரசிங்கவுடன், தான் 'பேஸ்



> 'நாட்டின் ஜனாதிபதியினுடைய அரசியல் ஆலோசகர்தான் இவ்வாறு நடந்துள்ளார். நாட்டின் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின்படி, 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய குற்றமாக இது உள்ளது. வாய்பேச முடியாத அப்பாவி விலங்குகளை இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் செய்கின்றமை – ஒரு வகை மன நோயாகும்.

புக்'கில் நட்பானதாகவும், பின்னர் திருமண பந்தத்தில் இணைந்து கொள்ளாமல், ஒரே வீட்டில் இரண்டு வருடங்கள் இருவரும் வாழ்ந்ததாகவும் இதன்போது ஆதர்ஷா கரந்தனா கூறினார். மாரசிங்கவுடன் வாழ்ந்த காலப்பகுதியில், தான் வளர்க்கும்



'சிஹிரோ' எனும் நாய்க்குட்டியின் நடத்தையில் சில மாற்றங்களைக் கண்டதாகவும், அதனையடுத்து என்ன நடக்கிறது என்பதை அறிய விரும்பியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து, மாரசிங்கவுக்குத் தெரியாமல் தனது கைப்பேசியின் மூலம் இந்த சம்பவத்தை பதிவு செய்து கொண்டதாகவும் அவர் கூறினார்.

'ஒரு நாள் எனது கைப்பேசியை படுக்கையறையில் ரகசியமாக வைத்து விட்டுவந்து, பிறகு அதனைப் பார்த்தபோது, அதில் இந்த சம்பவம் பதிவாகியிருந்தது" என்கிறார் ஆதர்ஷா.

மாரசிங்கவின் இந்த செயல் குறித்து, ஜனாதிபதியின் மனைவி மைத்ரி விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோருக்கு தான் முறையிட்டதாகவும், ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் ஆதர்ஷா மேற்படி ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டார்.

தனது செல்லப் பிராணி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டமை தொடர்பில், விலங்குகள் நலன் தொடர்பில் செயற்படும் அமைப்புகள் மற்றும் நபர்கள் நீதியைப் பெற்றுத் தர வேண்டும் என்றும், இதன்போது அவர் கோரிக்கை விடுத்தார்.

மாரசிங்கவுடன் வாழ்ந்த காலப் பகுதியில், அவரால் உடல் ரீதியாக தான் துன்புறுத்தப்பட்டதாகவும் இதன்போது ஆதர்ஷா குற்றஞ்சாட்டினார்.

ஆதர்ஷா கரந்தனா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான காலிமுகத் திடல் 'அரகலய" போராட்டத்தில் தீவிரமாகப் பங்கெடுத்திருந்த ஒருவராவார். முன்னாள் நாடாளுமன்று உறுப்பினர் ஆஷு மாரசிங்கவுக்கு எதிராக மிகப் பாரிய குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள போதும், அவர் இது குறித்து கருத்துகள் எவற்றினையும் வெளியிடவில்லை.

### யார் இந்த ஆஷு மாரசிங்க?

51 வயதாகும் ஆஷு மாரசிங்க, 2015ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தில், ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இவர் நாடாளுமன்றத்தில் அரசாங்க தரப்பு உதவி பிரதம கொறடா, மற்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழக பட்டதாரியான ஆஷு மாரசிங்க, ஜப்பான் 'ஐசு" பல்கலைக்கழகத்தில் கணிணி விஞ்ஞானம் மற்றும் பொறியில் துறையில் முனைவர் பட்டப் படிப்பையும் நிறைவு செய்தார். இவர் ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் வருகை தரு பேராசிரியராகவும் கடமையாற்றியுள்ளார் என அவரது லிங்க்ட்-இன் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. **(பிபிசி)**

## வட அமெரிக்க பனிப்புயலால்...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

பனிக்கட்டிகளை விலக்கும் இயந்திரங்களை கையாளும் நபர்கள் பற்றாக்குறையால் போக்குவரத்துப் பிரச்னைகள் அதிகரித்துள்ளன. குறைந்த ஊதியம் வழங்கப்படுவதே இந்நிலைக்கு காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. வெள்ளிக்கிழமை மட்டும் 5,600 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாக விமான சேவைகளைப் பின்தொடரும் ஃப்ளைட்அவேர் இணையதளம் கூறுகிறது. இதனால், கிறிஸ்துமசைக் கொண்டாட மக்கள் வீடுகளுக்குச் செல்வதில் சிரமம் ஏற்பட்டது.

அமெரிக்கா முழுவதும் அன்றைய தினம் 10 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டென்னசி பள்ளத்தாக்கு முழுவதும் மின்சாரத்தை சேமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வரலாற்றில் இதுவரையிலான, நூற்றுக்கும் மேற்பட்ட குறைந்தபட்ச குளிர்கால வெப்பநிலைப் பதிவுகள் அடுத்த சில நாட்களில் சமன் செய்யப்படலாம் அல்லது அதற்கும் குறைவான வெப்பநிலை பதிவாகலாம் என்று அமெரிக்க தேசிய வானிலை சேவை அமைப்பு கூறுகிறது. ஸ்காட்லாந்தில் இருந்து டென்வருக்கு குடிபெயர்ந்துவிட்ட 34 வயதான கிரெய்க் மெக்பிரீட்டி, 'என் அனுபவத்தில் இதுவே மிகவும் குளிர்ச்சியானது," என்று கூறினார்.



# அடகுவைத்த நகைகள் மோசடி; மீளப்பெற்று தருமாறு கோரிக்கை

## பாதிக்கப்பட்டவர்கள் விடுத்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 25

திருநெல்வேலியில் அமைந்துள்ள மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சுமார் 200இற்கு மேற்பட்ட பொதுமக்களின் நகைகள் அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்களால் மோசடி செய்யப்பட்ட நிலையில் அதனை எமக்கு மீளப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

மேலும், சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட எமது நகைகள் குறித்த வங்கி அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டன. இவ்வாறான நிலையில் எமது நகைகள் தற்போது வரை கிடைக்கப் பெறவில்லை. நாம் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டதுடன் பெரும் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளோம்.

நகை மோசடியுடன் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் சிலர் மீண்டும் வங்கியில் இணைக்கப்பட்டுள்ள நிலையில் எமது நகைகளை மீளத் தராமல் இழுத்தடிப்பு செய்வது ஏன்? நாம் வங்கிக்குச் சென்றால் அங்கிருக்கும் முகாமையாளர் ஏதோ புதிய விடயங்களை கேட்பது போல் எமது ஆதங்கங்களை கேட்கிறார். நான் மேல் இடத்துக்கு அறிவிக்கிறேன் எனக் கூறுவதே தொடர்கதையாக உள்ளது.

மக்கள் வங்கி அரசாங்கத்தின் வங்கி பாதுகாப்பானது எனக் கருதியே எமது அவசர தேவை காரணமாக நகைகளை அடகு வைத்தோம். நாம் அடகு நகைகளை உரிய காலப் பகுதியில் எடுக்காவிட்டால் ஒருநாள் கூட அவகாசம் தராது நகைகளை ஏலத்தில் விட்டுள்ளனர்.

ஆனால், 10 வருடங்கள் கடந்தும் நாம் அடகு வைத்த நகையை மீளத்தராது நொண்டி காரணங்களை கூறி காலம் கடத்தி வருவதை ஏற்க முடியாது.

எமக்கு நாம் வங்கியில் வைத்த நகைகள் வேண்டும் இல்லாவிட்டால் தற்போதைய சந்தை மதிப்பில் பணப் பெறுமதியை தர வேண்டும்.

ஆகவே, நாம் ஒன்றை கூறுகிறோம் தொடர்ந்து எம்மை ஏமாற்றலாம் என மக்கள் வங்கி கருதுமானால் வங்கியின் செயல்பாடுகளை முடக்கி பெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள தயங்க மாட்டோம் - என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# மதில் இடிந்து வீழ்ந்து இளைஞர் உயிரிழப்பு

வடமராட்சி, டிசெ. 26

வடமராட்சி - தும்பளை பகுதியில் மதில் இடிந்து விழுந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

தும்பளை - செம்மண்பிட்டியை சேர்ந்த விக்னராஜா கிருஷ்ணன் (வயது 32) எனும் இளைஞனே உயிரிழந்தார்.



வீட்டின் மதிலில் ஏறி நின்ற போது மதில் இடிந்துவிழுந்ததில் தலையில் படுகாயமடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர், அங்கு சிகிச்சை பல னின்றி உயிரிழந்தார். (ஐ-02)

# இலங்கையின் உச்சியான பனைமுனையில் கல்வெட்டு!

## அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்



யாழ்ப்பாணம், டிசெ. 26

இலங்கையின் உச்சி என அழைக்கப்படும் “பனை முனை கல்வெட்டு திறப்பு விழா” பருத்தித்துறை - பனை முனை பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் 2.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பனை முனை கல்வெட்டை திறந்துவைத்தார்.

இதுவரை காலமும் இலங்கையின் தலைப்பகுதியாக பருத்தித்துறை - சக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இலங்கையின் தேசிய கொடி பொறிக்கப்பட்ட கட்டுமானம் கருதப்பட்டது. எனினும், அது உண்மையில் தெற்கே தெய்வேந்திரமுனையை நேரே இணைக்கும் முனை அல்ல எனவும், வரலாற்று ரீதியாகவும் பண்டைய வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ளவாறும் உண்மையான இலங்கையின் தலைப்பகுதியான (முனை) பருத்தித்துறை



ஒரு பனை முனை அடையாள கல்வெட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் உத்தியோக பூர்வமாக திறக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சக்கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முனை போர் காலத்தில் வரலாற்றுக் குறிப்புகள், பண்டைய வரைபடங்கள் கணக்கில் எடுக்காமல் பாதுகாப்பு தரப்பால் அமைக்கப்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-03)

கல்வி tv CHANNEL-1

**26.12.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**26.12.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மட்டக்களப்பு மரியாள் பேராலயத்தில் கிறிஸ்மஸ் விசேட வழிபாடுகள் நடந்தன!



மட்டக்களப்பு, டிசெ. 26

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் இயேசுபிரான் உயிர்த்த நத்தார் பெருவிழாவை முன்னிட்டு மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகை தலைமையில் நேற்று நள்ளிரவு ஆராதனை இடம் பெற்றது.

நத்தார் பெருவிழாவை முன்னிட்டு ஆயர் பொன்னையா யோசப் ஆண்டகையால் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் நாட்டில் சமாதானம் நிலைத்திருக்கவும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நீங்கவும் இனங்களுக்கு இடையில் நல்லுறவு நிலை பெறவும் வேண்டி விசேட பிரார்த்தனை வழிபாடுகளும் இயேசு பிரானின் நற்போதனைகளை புகழ்ந்து நத்தார் கீதங்களும் இசைக்கப்பட்டன



இந்த நள்ளிரவு ஆராதனையில் கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களையும் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

இதேவேளை மட்டக்களப்பின் கேந்திர நகரங்களான செங்கலடி, வாழைச்சேனை, வாகரை , தேற்றாத்தீவு ஆயித்தியமலை உட்பட பல இடங்களில் நத்தார் தினம் விசேட பூசைகளுடன் கொண்டாடப்பட்டது. (ஐ)

# பண்ணைமீது மின்னல் தாக்கம் 27 கால்நடைகள் உயிரிழந்தன!

மட்டக்களப்பு, டிசெ. 26

ஏறாவூரிலுள்ள வீடொன்றிலிருந்த பண்ணை மீது மின்னல்தாக்கியதில் அந்தப் பண்ணை முற்றாக கருகி சாம்பலாகியுள்ளது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவம் இடம்பெற்றது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

கூலித் தொழிலாளியான இஸ்மாயில் அன்வர் என்பவர் தனது வீட்டிலேயே பண்ணையை அமைத்து, ஆடு, கோழி மற்றும் வாத்து என்பவற்றை வளர்த்து வந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக நேற்றுமுன்தினம் மாலையிலிருந்து கடும் இடி, மின்னலுடன் பெய்தது. நேற்று அதிகாலை மின்னல் தாக்கத்தால் பண்ணையிலிருந்த 9 ஆடுகள், 11 கோழிகள், 4 சேவல்கள், 3 வாத்துக்கள் என்பவை கருகி சாம்பலாகின.



இரு தட்டுக்களை கொண்ட அந்தப் பண்ணையின் மேற் பகுதியில் ஆடுகளும், கீழ்ப்பகுதியில் கோழிகளும் வாத்துக்களும் வளர்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஆதிவாசிகள் தனித்து களம்!

அம்பாறை, டிசெ. 26

2023 ஆம் ஆண்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுயாதீனமாக களமிறங்குவது தொடர்பில் ஆதிவாசிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

தேர்தலை எதிர்கொள்வதற்கான நடவடிக்கையில் இறங்குமாறு ஆதிவாசித் தலைவர் உருவரிகே வன்னிலாஎத்தோ, தமது தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதன்படி அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் ஆதிவாசிகள் போட்டியிடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் ஊடாக ஆதிவாசிகளுக்கு ஓர் ஆசனம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மட்டக்களப்பில் தீவிரம்!

மட்டக்களப்பு, டிசெ. 26

மட்டக்களப்பில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு பணிப்புரைக்கு அமைவாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி. சுகுணனின் வழிகாட்டலில் மட்டக்களப்பு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி இ. உதயகுமார் தலைமையில் இந்த டெங்கு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பார் வீதி சின்ன உப்போடை கிராம சேவையாளர் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது, டெங்கு நுளம்பு பெருக்கம் உள்ள இடங்கள் அடையாளம் காணப்பட்டு, உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. (ஐ)



# சம்பந்தன் தேய்ந்த ரயர் கார் 90வயதிலும் ஆய்வு செய்கிறார்!

## இப்படி சொல்கிறார் சாணக்கியன் எம். பி.

கல்முனை, டிசெ. 26

சம்பந்தன் ஐயா கார் போன்றவர். அந்த காரின் ரயர் கொஞ்சம் தேய்ந்து உள்ளது. ஆனால், இயந்திரம் நன்றாக ஓடுகின்றது. 90 வயதிலும் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்கிறார் என்று சாணக்கியன் எம். பி. கூறியுள்ளார்.

மருதமுனை ஜெஸீலின் கவி வரிகள் மற்றும் இசையமைப்பில் என் நிலவே பாடல் இறுவட்டு வெளியீட்டு விழா சனிக்கிழமை நடந்தது.

இதில் விருந்தினராக பங்கேற்ற சாணக்கியன் எம். பி. மேலும் உரையாற்றுகையில்,

இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை தொடர்பிலான பாடல்களை இயற்றினால் பொருத்தமாக இருக்கும். தற்போது போதைப்பொருள் எமது பிரதேசத்தில் பிரச்னையாக வந்து கொண்டு இருக்கின்றது. பொருளாதார நெருக்கடியால் அரசாங்கம்தான் இதன் பின்னணியில் இருப்பதாக எனது மனதில் சந்தேகமும் இருக்கின்றது.

தமிழ் மொழியால் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளோம். வடக்கு - கிழக்கில்கூட தமிழ் மொழியின் ஊடாகத் தான் எமது அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்த கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் தான் எமது பாடல்கள் கலாசாரங்களின் ஊடாக எமது பகுதிகளில் அரசியல் அபிலாசைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1948 ஆண்டில் இருந்து எமது இனங்களுக்கு இடையிலான விகிதாசாரங்களை சம்பந்தன் ஐயா ஆய்வு ஒன்றை மேற்கொண்டு புள்ளிவிபரவியல் ஒன்றை வைத்திருக்கின்றார். 90 வயதிலும் இவ்வாறான ஆய்வுகளை சம்பந்தன் ஐயா மேற்கொள்கின்றார். சம்பந்தன் ஐயாவை பற்றி நான் சில இடங்களில் அவர் கார் மாதிரி என்று குறிப்பிட்டுள்ளேன்.

அந்த காரின் ரயர் கொஞ்சம் தேய்ந்து உள்ளது. ஆனால், இயந்திரம் நன்றாக ஓடுகின்றது. அப்படி தான் அவர் தற்போது இவ்வாறான புள்ளிவிபரங்களை வைத்திருக்கின்றார். கிழக்கு மாகாணத்தில் மட்டும் ஏனைய மாகாணங்களைவிட பெரும்பான்மை சமூகத்தினர் 800 வீதத்தால் அதிகரித்துள்ளனர். அதிலும் அம்பாறை மாவட்டத்தில்தான் அதிகரித்துள்ளது. எனவே வட - கிழக்கில் உள்ள நாங்கள் ஒற்றுமைப்பட வேண்டும் - என்றார். (ஐ-01)

# கடற்கரை பள்ளிவாசல் கொடி; ஆயிரக்கணக்கானோர் திரள்வு

கல்முனை, டிசெ. 26

கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் 201ஆவது கொடியேற்ற விழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜூம்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரை பள்ளி வாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீபின் தலைவர் அல்ஹாஜ் எஸ். எம். ஏ அஸீஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

கல்முனை முஹ்யித்தீன் ஜூம்ஆப் பெரிய பள்ளிவாயலில் இருந்து புனித கொடியானது உலமாக்கள், பக்கீர் ஜமாஅத்தினர், நிருவாகிகள், ஊர்மக்கள் புடைசூழ தீன் கலிமா முழக்கத்துடன் ஊர் வலமாகச் சென்று கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா மினாராக்களில் ஏற்றி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.



கொடியேற்று தினத்தில் இருந்து தொடர்ந்து 12 நாட்களுக்கும் பாதுஷா சாஹூல் ஹமீது வலியுல்லாஹ் நாயகம் (கத்தஸல்லாஹூ சிர்ரஹூல் அஸீஸ்) அன்னவர்களின் மீதான புனித மௌலித் ஷரீப் பாராயணம், பக்கீர் ஜமாஅத்தினரின் புனித றிபாஈ றாதிப், உலமாப் பெருமக்களின் சன்மார்க்கச் சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளன. கொடியிறக்கும் தினமான ஜனவரி 4ஆம் திகதி திருவிழா நிறைவடையும். (ஐ-01)

# பென்குயின் பறவைகள் 2100இல் அழிந்துவிடும்!

## ஆய்வில் அதிர்ச்சி தகவல்



நியூயோர்க், டிசெ. 26

பெரிய அளவிலான பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளாவிட்டால் அந்தாட்டிக்காவின் 97 சத வீதமான நிலம் சார்ந்த உரியினங்களின் எண்ணிக்கை 2100 ஆம் ஆண்டில் வெகுவாக குறைந்துவிடும். அத்துடன், எம்பெரர் பென்குயின் முற்றாக அழிந்து போகும் அபாயம் உள்ளது என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

குயீன்ஸ்லாந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. ஆண்டுக்கு 23 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிட்டால் அந்தாட்டிக்காவில் உள்ள உயிரினங்களை பாதுகாக்கலாம் எனவும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான தொகையை ஆண்டுக்கு ஒரு முறை தொடர்ந்து செலவு செய்து வந்தால் அந்தாட்டிக்காவில் உள்ள 84வீத நிலவாழ் பறவைகள், உயிரினங்கள் மற்றும் தாவர குழுக்கள் காப்பாற்றப்படும். பருவநிலை மாற்றம் அந்தாட்டிக்காவில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகிறது.

பருவநிலை மாற்றத்தை குறைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். அந்தாட்டிக்காவில் உள்ள உயிரினங்கள் மிகவும் குளிரான, அதிக காற்று போன்றவற்றைத் தாங்கி வாழ்வதற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டுள்ளன. உரிய கவனம் கொடுக்கப்படாவிட்டால் அந்தாட்டிக்காவில் உள்ள பெங்குவின் உட்பட பல உயிரினங்கள் அழிந்து போகும் அபாயமுள்ளது. (ஐ)

# சீனாவின் நகரத்தில் ஒரேநாளில் 50 இலட்சம் பேருக்கு கொரோனா?

பீஜிங், டிசெ. 26

**சீனாவின் ஒரே ஒரு நகரில் ஒரு நாளில் மட்டும் சுமார்50 இலட்சம் பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யயப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும், அந்த நாட்டின் அரசு ஊடகங்களில்கூட பகிரப்பட்ட இந்தத் தகவல் பின்னர் அவசரமாக நீக்கப்பட்டது.**

இது குறித்து அந்த நாட்டின் கிங்டாவ் நகர சுகாதாரத் துறை தலைவரை மேற்கோள் காட்டி ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு சொந்தமான செய்தி நிறுவனம் வெள்ளிக்கிழமை இரவு தெரிவித்ததாவது:

நகரில் ஒரே நாளில் மட்டும் 49 லட்சம் முதல் 53 இலட்சம் வரையிலானவர்களுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது நகரில் அந்த நோய்த்தொற்று வெகு வேகமாகப் பரவி வருகிறது. புதிய அலை இன்னும் உச்சத்தைத் தொடுவதற்கு முன்னதாகவே தினசரி கொரோனா பாதிப்பு இந்த அளவுக்கு அதிகரித்துள்ளது.

நகரில் கொரோனாவால் புதிதாக பாதிக்கப்படுவோரின் வீதம் இன்னும் அதிகரிக்கும்.

இதே தகவல், அரசு சார்புடைய பல ஊடகங்களில் பரவலாக பகிரப்பட்டது. எனினும், அந்தத் தகவலில் கிங்டாவ் நகர தினசரி கொரோனா பாதிப்பு குறித்த புள்ளிவிவரம் சனிக்கிழமை நீக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக, நாடு முழுவதுமே கடந்த 24 மணி நேரத்தில் வெறும் 4,103 பேருக்கு மட்டும்தான் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளதாக அரசின் அதிகாரபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்த ஒரு நாளில் யாரும் கொரோனாவுக்கு பலியாகவில்லை எனவும் அந்த புள்ளிவிவரங்கள் தெரிவித்தன.

உலகையே உலுக்கிய கொரோனா சீனாவிலிருந்தே பரவியது. மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் தாக்கம் குறைவாகவே இருந்தது. இதற்கு அரசின் கட்டுப்பாடுகளே காரணமாக இருந்தன. இந்நிலையில், இப்போது, சீனாவில் கொரோனா தாக்கம் உச்சமடைந்துள்ளது. தொற்றால், அங்கு 10 இலட்சம் பேர் வரை மரணிக்கக்கூடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொரோனா தொற்று பாதிப்பு இனி தினசரி அறிவிக்கப்படாது!

## சீன அரசாங்கம் அறிவிப்பு

கொரோனாவின் தினசரி பாதிப்பு எண்ணிக்கையை இனி வெளியிடமாட்டோம் என சீன அரசு அதிரடியாக அறிவித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு சீனாவின் வுஹான் மாகாணத்தில் இருந்து கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. தொடர்ந்து உலக நாடுகளில் பரவிய கொரோனா உலகையே ஆட்டி படைத்தது. பின்னர் பல்வேறு கொரேனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பிறகு கொரோனாவின் தாக்கம் கட்டுக்குள் வந்தது.

இந்நிலையில் தற்போது சீனாவில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. தினமும் 10 இலட்சம் பேர் தொற்றால் பாதிக்கப்படுகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனிடையே கடந்த 20 நாட்களில் 25 கோடி பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதாக மற்றொரு தகவல் தெரிவிக்கிறது.

ஆனால், சீனா கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் பற்றிய தகவல்களை சரியாக அளிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கொரோனாவால் ஏற்படும் பாதிப்பு மற்றும் பலி எண்ணிக்கையை குறைத்து சீன அரசாங்கம் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது. சீனாவில் தினசரி கொரோனா பாதிப்புகளை அந்நாட்டின் தேசிய சுகாதார மையம் வெளியிட்டு வருகிறது.

இந்த நிலையில் சீனா, கொரோனா பாதிப்பு குறித்த புள்ளி விவரங்களை வெளியிடமாட்டோம் என்று தெரிவித்துள்ளது. இனி கொரோனா பாதிப்பு தகவல்கள் சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தால் வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளது. ஆனால், இந்த மாற்றத்துக்கான காரணங்களை குறிப்பிடவில்லை. அதேபோல், சீன நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் எப்படி கொரோனா தகவல்களை அளிக்கும் என்பது குறித்தும் கூறப்படவில்லை.

# அமெரிக்காவில் கடும் பனிப்புயல் 18 பேர் பலி; 15 இலட்சம் பேர் பாதிப்பு!



நியூயோர்க், டிசெ. 26

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள கடும பனிப்புயல் காரணமாக, இதுவரை 18 பேர் மரணமாகினர். 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பனிப்புயலால் விமான சேவைகள், சாலை போக்குவரத்து, மின்சார சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. "வெடிகுண்டு சூறாவளி" எனப்படும் பனிப்புயலால், சனிக்கிழமையன்று 2,300 அமெரிக்க விமானங்கள் இரத்து செய்யப்பட்டன. மேலும், வெள்ளிக்கிழமை 5,300 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டன.

கடுமையான பனிப்புயல் தாக்கி 18 பேர் பலியாகினர் என்று கூறப்படுகிறது. வியாழக்கிழமை முதல் 15 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் மின்சாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வளிமண்டல அழுத்தம் திடீரென குறைந்ததால் எழுந்த பனிப்புயல், அமெரிக்கா - கனடா எல்லையில் உள்ள ஏரிகளை உறையச் செய்துள்ளது. தேசிய வானிலை சேவை மையத்தின கருத்துப்படி, வெப்பநிலை 48 பாகை செல்சியஸ் இருந்ததுள்ளது.

பனிப்புயலால், பல இடங்களில் 50இற்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதி விபத்துக்குள்ளாகின. வீடுகளும், வெளியே நிற்கும் கார்களும் பனியில் மூடியுள்ளன. சாலைகளில் பல அடி மீற்றருக்கு பனி மணிகள் படர்ந்துள்ளதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், அமெரிக்க மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஒளிரும் நட்சத்திரம்!



வாஷிங்டன், டிசெ. 26

ஒளிரும் நட்சத்திரத்தின் ஆறு புள்ளிகளைக் கொண்ட ஒளிப்படத்தை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி வெளியிட்டுள்ளது.

இந்த பரந்த அண்டத்தில் 'பேஊ 7469' விண்மீன் திரளின் மைய பகுதியில், அதாவது அதன் இதயப் பகுதியில் உள்ள நட்சத்திரத்தின் ஒளிரும் ஒளிப்படத்தைத்தான் தற்போது ஜேம்ஸ் வெப் பதிவு செய்து அனுப்புயுள்ளது.

இந்தப் படம் குறித்து ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் வெளியிட்ட குறிப்பில், "விண்மீன் செயல்பாட்டில் உள்ள விண்மீன் கருவை கொண்டுள்ளது. இது மிகவும் பிரகாசமான மத்திய பகுதி. இது மையத்தில் விழும்போது தூசு மற்றும் வாயுவால் வெளிப்படும் ஒளி பிரகாசமாக மின்னுகின்றன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தொண்டு நிறுவனங்களில் பெண்கள் பணியாற்ற தடை!

## தலிபான் அரசு அறிவிப்பு

காபூல்,டிசெ. 26

ஆப்கானிஸ்தானில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் உட்பட அனைத்து தொண்டு நிறுவனங்களும் பெண்களை பணியமர்த்துவதற்கு தலிபான் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

நிதி அமைச்சர் காரி தின் முகமது ஹனீப் அனுப்பியுள்ள கடிதத்தின் வாயிலாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உத்தரவைத் தொண்டு நிறுவனங்கள் பின்பற்றவில்லையெனில், ஆப்கானிஸ்தானில் அவை செயல்படுவதற்கான உரிமம் இரத்து செய்யப்படும் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைச்சகம் கூறுகையில், "தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் முறைபடி 'ஹிஜாப்' அணிவதில்லை என ஏராளமான முறைப் பெறப்பட்டுள்ளன ' எனத் தெரிவித்தது.

இருப்பினும், இந்தத் தடை உத்தரவு தொண்டு நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து பெண்களுக்குமானதா அல்லது ஆப்கான் பெண்களுக்கு மட்டும் பொருந்துமா என்பது குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

பெண்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு செவ்வாய்க் கிழமை தலிபான் அரசு தடை விதித்தது. இதையடுத்து, தற்போது தொண்டு நிறுவனங்களில் பெண்கள் பணியாற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு



# பங்களாதேஷுடனான டெஸ்ட்: தொடரை வென்றது இந்தியா!




மிர்பூர், டிசெ. 26

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வென்று தொடரை இந்திய அணி கைப்பற்றியுள்ளது.

பங்களாதேஷுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. முன்னதாக நடைபெற்ற ஒருநாள் போட்டி தொடரில் 2-1 என்ற கணக்கில் பங்களாதேஷ் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரு அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா வெற்றியைப் பதிவு செய்தது. இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கடந்த 22ஆம் திகதி தொடங்கியது. இதில், நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்த பங்களாதேஷ் அணி, முதல் இனிங்ஸில் 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

அடுத்து விளையாடிய இந்திய அணி 314 ஓட்டங்ளுக்கு ஆட்டமிழந்தது.

இதனைத் தொடந்து, இரண்டாவது இனிங்ஸை தொடங்கிய பங்களாதேஷும் 231 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையம் இழந்தது.

பங்களாதேஷின் லிற்றன் தாஸ் அதிகபட்சமாக 73 ஓட்டங்கள் குவித்தார். இந்திய அணி தரப்பில் அக்சர் பட்டேல் 3 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதையடுத்து, 145 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. ஷுப்மன் கில் 7 ஓட்டங்களுடனும், கே.எல்.ராகுல் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து அதிர்ச்சியளித்தனர்.

அடுத்து வந்த புஜாரா 7 ஓட்டங்களுடன் ஸ்ரொம்பிங் முறையில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த அக்சர் பட்டேல் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த, மறுபுறம் விராட் கோலி ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார். இதனால், இந்திய அணி 37 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்களை இழந்தது.

இதனையடுத்து, ஜெயதேவ் உனாத்கட் களமிறங்கினார். அவருடன் ஜோடி சேர்ந்த அக்சர் பட்டேல் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 3ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 45 ஓட்டங்களை சேர்ந்த்தது. அக்சர் பட்டேல் 26 ஓட்டங்களிலும், உனாத்கட் 3 ஓட்டங்களிலும் களத்தில் இருந்தனர்.

இந்நிலையில், நான்காவது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. அக்சர் பட்டேல் 34 ஓட்டங்களிலும், உனாத்கட் 13 ஓட்டங்களிலும், ரிஷப் பந்த் 9 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

ரவிச்சந்திரன் அஸ்வின் 42 ஓட்டங்களையும், ஷ்ரேயாஸ் ஐயர் 29 ஓட்டங்களையும் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர். பங்களாதேஷும் தரப்பில் மெகதி ஹசன் 5 விக்கெட்களையும், சகீப் அல் ஹசன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் இந்தியா டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியுள்ளது.

## 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்குகிறார் வோர்ணர்!



மெல்பர்ன்,டிசெ.26

100ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடி சாதனை படைக்க காத்திருக்கிறார் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டேவிட் வோர்ணர்.

அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்க அணிகள் மோதும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று திங்கட்கிழமை மெல்பர்ன் மைதானத்தில் தொடங்குகிறது. கிறிஸ்துமஸ் தினத்துக்கு மறுநாள் நடைபெறும் டெஸ்ட் போட்டிகள் பொக்சிங் டே டெஸ்ட் போட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன. இதன்படி இந்த டெஸ்டும் பொக்சிங் டே டெஸ்ட் போட்டியாக அமைகிறது.

இதுவரை 99 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் டேவிட் வோர்ணருக்கு இந்த போட்டி 100ஆவது டெஸ்ட் போட்டியாக அமையவுள்ளது.

இதுகுறித்து மெல்பர்னில் டேவிட் வோர்ணர் கூறும்போது, “இது எனக்கு 100ஆவது டெஸ்ட் போட்டியாக அமைவது மகிழ்ச்சி. நான் அவுஸ்திரேலிய அணிக்காக டெஸ்ட் போட்டிகளில் தலைமைப் பொறுப்பேற்பதற்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் (சி. ஏ) தடை இன்னும் நடைமுறையில் உள்ளது. இதற்கு கிரிக்கெட் அவுஸ்திரேலியா அமைப்புதான் பதில் சொல்லவேண்டும்” என்றார்.

## ஆஸி. ஓப்பனில் பட்டம் வெல்வேன்!

### ரபேல் நடால்



மெல்பர்ன், டிசெ. 26

அவுஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியில் மீண்டும் பட்டம் வெல்வேன் என்று ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் தெரிவித்துள்ளார்.

2022இல் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் நடால் பட்டம் வென்றார். தற்போது போட்டியில் கலந்து கொள்ள அவர் அவுஸ்திரேலியா வந்துள்ளார். இந்தப் போட்டி வரும் ஜனவரி 16ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நடால் கூறியதாவது: மீண்டும் அவுஸ்திரேலிய ஓப்பனில் நான் பட்டம் வெல்வேன். போட்டிக்காக நான் விரைவிலேயே இங்கு வந்துவிட்டேன். கடந்த சில நாட்களாக பயிற்சி மேற்கொண்டேன் - என்றார். (ஐ)



## பாகிஸ்தான் தெரிவு குழு தலைவரானார் அப்ரிடி!

இஸ்லாமாபாத், டிசெ. 26

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் (பி. சி. பி.) தேசிய அணித் தெரிவுக்குழுவின் இடைக்காலத் தலைவராக முன்னாள் அணித் தலைவர் ஷகீட் அப்ரிடி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தெரிவுக் குழுத் தலைவராக இருந்த ரமீஸ் ராஜா அண்மையில், பதவி விலகினார். இதைத் தொடர்ந்து நேற்று ஷகீட் அப்ரிடி தெரிவுக் குழுவின் இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அப்துல் ரசாக், ராவ் இப்திகார், அஞ்சும் உள்ளிட்டோர் அடங்கிய தெரிவு குழுவை அப்ரிடி வழிநடத்துவார். மேலும் தெரிவுக் குழுவுக்கு ஹாரூன் ரஷித் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

தெரிவுக் குழு இடைக்காலத் தலைவராக தெரிவானமை குறித்து ஷகீட் அப்ரிடி கூறியதாவது, எனக்கு மதிப்பளித்து இந்தப் பொறுப்பை வழங்கியது தொடர்பாக நான் பெருமை கொள்கிறேன். எனது திறமையின் மூலம் இந்தப் பணியை சிறப்பாக செய்வேன். பாகிஸ்தான் அணி வெற்றிப் பாதைக்கு திரும்ப வேண்டும்- என்றார். (ஐ)

## இப்போதைக்கு ஓய்வில்லை முடிவை மாற்றினார் மரியா!



புவனஸ் அயர்ஸ், டிசெ. 26

ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட தேசிய அணிக்காக தொடர்ந்து விளையாட அந்த அணி வீரர் ஏஞ்சல் டி மரியா முடிவு செய்துள்ளார்.

அண்மையில் கட்டாரில் முடிவடைந்த உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணி 4-2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி கிண்ணத்தை வென்றது.

இந்த போட்டியில் மெஸ்ஸி 2 கோல்களும், டி மரியா ஒரு கோலும் அடித்தனர்.

உலகக் கிண்ண போட்டிக்கு முன்னதாக சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் இருந்து ஓய்வு பெற இருப்பதாக டி மரியா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஆர்ஜென்ரீனா உலகக் கிண்ணத்தை வென்றதைத் தொடர்ந்து தனது ஓய்வு முடிவை மாற்றிக் கொண்டுள்ளார் ஏஞ்சல் டி மரியா. அவர் கூறும்போது, “எனக்கு இப்போது 34 வயதாகிறது. உலகக் கிண்ணத்துடன் ஓய்வு பெற முடிவு செய்திருந்தேன். இப்போது எனது முடிவை மாற்றிக் கொண்டேன். 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கோபா அமெரிக்கா போட்டி வரை விளையாடுவேன்” என்றார். (ஐ)

# கண்டி ரயில் நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது



கொழும்பு, டிசெ. 26

மலையகத்துக்கான ரயில் சேவைகள் நேற்று தாமதடைந்தன. இதனால், விடுமுறைக்காக வீடுகளுக்கு திரும்பியவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

கண்டி ரயில் நிலையத்தின் வளாகம் வெள்ளத்தில் மூழ்கியமையாலேயே ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

# போதைப் பொருளுடன் 25 பேர் இரு நாளில் கைது

ஹற்றன், டிசெ. 26

பல்வேறு வகையான போதைப் பொருள்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரைச் சென்ற 25 பேர் இரண்டு நாட்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினமும் நேற்றும் ஹற்றன் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி விஜித அல்விஸின் ஆலோசனைக் கமைய, ஏனைய பொலிஸ் நிலைய அதிகாரிகள் மற்றும் பொலிஸ் போதை ஒழிப்பு பிரிவின் ஸ்டுவட் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் காலி, சிலாபம், மொனராகலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், இவர்கள் அனைவரும் 20-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களை ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனைவியை குத்தி கொன்ற கணவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, டிசெ. 26

தம்பதியரிடையே ஏற்பட்ட முரண்பாட்டால் கணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மனைவி உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெஹெம்பர பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தெஹெம்பர - பஹல பெரகம பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொல்லப்பட்டார்.

இந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான 55 வயதுடைய குறித்த பெண்ணின் கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் அம்பாந் தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# வீட்டின்மீது மண்மேடு சரிந்தது; சகோதரர் இருவர் உயிரிழப்பு!

## மற்றொருவர் படுகாயம்

கண்டி, டிசெ.26

**வீடொன்றின்மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் சகோதரர்கள் இருவர் உயிரிழந்தனர்.**

கண்டி - அக்குரணை - துனுவில பகுதியில் நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் பெற்றோரும் பிள்ளைகளுமாக ஐவர் வசித்து வந்த நிலையிலேயே மண்மேடு சரிந்து வீழ்ந்தது.

இதில், 16 வயது சகோதரியும், 19 வயது சகோதரனும் உயிரிழந்தனர். 18 வயதான சகோதரன் ஒருவர் படுகாயமடைந்து பேராதனை போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மலையகப் பகுதியில் கடந்த இரு நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

# இனப் பிரச்னைக்கு தீர்வு என்று தமிழரை ஏமாற்றுகிறார் ரணில்!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 26

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தமிழ் மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயல்பாடாகும் - என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனப் பிரச்னைக்கு தீர்வு காண தென்னிலங்கை அரசியல்வாதிகள் இடமளிக்கவில்லை என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்து, நாட்டின் நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தவே ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

கொழும்பில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு எதிர்வரும் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை நகைப்புக்குரியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற



கட்சித் தலைவர் கூட்டத்தில் மாறுபட்ட பல கருத்துகளை தமிழ் தரப்பினர் முன்வைத்துள்ளனர்.

அரசியல் தீர்வு விவகாரத்தில் தமிழ் அரசியல் கட்சிகளிடம் முதலில் ஒற்றுமை கிடையாது. சமஷ்டி அடிப்படையிலான தீர்வு சாத்தியமற்றது. பொருளாதார நெருக்கடியை பகடைக்காயாக கொண்டு நாட்டுக்கு எதிரான தீர்மானங்களை செயல்படுத்துவதாயின், 30 வருடகால யுத்தத்தை வெற்றிகொள்ளாமல் இருந்திருக்கலாம்.

75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் தேசிய இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தமிழ் மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயல்பாடாக உள்ளது.

இனப் பிரச்னைக்கு தீர்வு காண நான் தயாராக இருந்தேன். தென்னிலங்கை அரசியல்வாதிகள் அதற்கு இடமளிக்கவில்லை என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்து, இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செயல்பாடுகளில் தான் ஜனாதிபதி ஈடுபடுகிறார்.

இனப் பிரச்னைக்கு தீர்வாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்த தமிழ் அரசியல் தலைமைகள் அரசாங்கத்துக்கு எவ்வித அழுத்தமும் பிரயோகிக்கவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் எதிர்க்கட்சியாக பதவி வகிக்கும்போதுதான் மாகாண சபை தேர்தல் பிற்போடப்பட்டது. மாகாண சபை தேர்தலை நடத்தினால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படும் - என்றார். (ஐ)

# வகுப்புக்கு சென்ற மாணவியை காணவில்லை என முறைப்பாடு

கண்டி, டிசெ 26

பிரத்தியேக வகுப்புக்கு சென்ற 15 வயது மாணவி வீடு திரும்பவில்லை என்று மாணவியின் தாயார் லுணுகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

லுணுகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சூரிய கொடை பகுதியில் லுணுகலை பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 10இல் கல்வி பயிலும் 15 வயது மாணவியே நேற்று முன்தினம் காலை முதல் இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பொலிஸாரும் மாணவியின் உறவினர்களும் இணைந்து தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர். மேலதிக விசாரணைகளை லுணுகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 26

நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் இதனைத் தெரிவித்துள்ளது. இதற்கமைய குருநாகல், மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# நத்தார் பண்டிகை கொண்டாட்டம் மலையகத்தில் சிறப்பாக நடந்தது!



கண்டி, டிசெ. 26

நத்தார் பண்டிகை தினமான நேற்று மலையகத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட ஆராதனைகள், கலை விழாகள் என்பன இடம்பெற்றன.

ஹற்றன் நகரத்தில் உள்ள திருச்சிலுவை தேவலாயத்தில் நள்ளிரவு 12 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெற்று அருட் தந்தை நியூமன் பீரிஸினால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் ஈடுப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்.-சென்னை...

சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த விமானத்தில் 60 பயணிகள் பயணித்தனர். பின்னர் இந்த விமானத்தில் 48 பயணிகள் சென்னைக்குச் சென்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான விமானங்களுக்கு பயன்படுத்தப் படும் அலையன்ஸ் எயார் யுவுசு-72 ரக விமானத்தில் 60 பயணிகள் அமரக்கூடிய வசதி உள்ளது என்றும் அவர் கூறினார்.

## மின்சாரம்...

தனியார் வங்கிகளுக்கே இந்தக் கடன் தொகையை செலுத்த வேண்டியுள்ளது.

மின்சார விநியோகஸ்தர்களுக்கு சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாயும் ஒப்பந்தக்காரர் களுக்கு சுமார் 30 ஆயிரம் கோடி ரூபா யும் வழங்க வேண்டியுள்ளதாக எமக்கு கிடைத் துள்ள தகவல்களில் தெரியவந் துள்ளது.

மீதமுள்ள 60 ஆயிரம் கோடி ரூபாயை வங்கிகளுக்கு செலுத்த வேண்டும்.

கொரோனா தொற்றுப் பரவல் காலத் தில் ஹோட்டல் துறை மற்றும் பல துறை களுக்கு வழங்கப்பட்ட கடன் சலுகை ளுக்காக அந்த வங்கிகள் அர்ப்பணித்த தொகை பின்னர் அந்தந்த வங்கிகளில் செலுத்தப்படும் என்று அரசு அறிவித்தி ருந்தது.

இதன்படி, திருப்பிச் செலுத்தப்பட வேண் டிய தொகை சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாயா கும். இவையனைத்தும் இணைந்தால் இந்த மூன்று துறைகளுக் கும் அரசாங்கம் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை ஒரு இலட்சம் கோடி ரூபாய் என்று சம்பிக்க ரணவக்க எம். பி. தெரிவித்துள்ளார். (ஐ-சி)

## உடுத்துறையில்..

பிரதான நினைவேந்தல் நடைபெறும். 9.25 மணிக்கு பொதுச் சுடர் ஏற்றலுடன் நினைவேந்தல் ஆரம்பமாகும்.

உடுத்துறை தவிர, ஆழிப்பேரலை யால் அழிவை சந்தித்த வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, உடுத்துறை 10ஆம் வட்டாரம், தாளையடி, மணல்க ாடு பகுதிகளிலும் ஆழிப்பேரலை நினைவேந்தல்கள் நடைவெறவுள்ளன.

2004 டிசெம்பர் 26 ஆழிப்பேரலை அனர்த்தத்தால் யாழ்ப்பாணத்தின் - வட மராட்சி கிழக்கில் ஆயிரத்து 2 பேர் கொல்லப்பட்டனர். இவ்வாறு கொல் லப்பட்டவர்களில் 695 பேரின் உடலங்க ள் உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் அடக்கம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் சகல மாவட்டங் களிலும் நினைவேந்தலுக்கான ஏற்பாடு கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சுனாமி தாக்கிய நேரமான 9. 25 மணிக்கு நினை வேந்தல்கள் ஆரம்பமாகும் என்று தெரி விக்கப்பட்டது. (ஐ-02)

## வெள்ளத்தில்...

பெரும் வெள்ளப்பெருக்கு காரணமாக கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வியாபார ஸ்தலங்களில் உள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளதுடன், சில வாகனங்களும் நீரில் மூழ்கி அடித் துச் செல்லப்பட்டதாக அலவத்து கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி- மாத்தளை வீதி முற்றாக ஸ்தம்பித்து போக்குவரத்து பாதிக்கப் பட்டதையடுத்து, மாற்று வழிகள் பயன் படுத்தப்பட்டன.

இதேவேளை, அக்குரணையில் நேற்று இடம்பெற்ற மண்சரிவில் சிக்கி சகோதரர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இதேசமயம், நேற்று மாலை வரை யான தகவல்களின் அடிப்படையில் மலையகத்தில் கடும் மழையால் 346 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 511 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 66 வீடுகள் சேதமடைந்துள்ளன. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 14இல்)

## உள்ளூராட்சி...

உள்ளூராட்சி தேர்தலை மார்ச் 20ஆம் திகதிக்கு முன் நடத்த வேண்டும். குறிப்பாக உள்ளூராட்சி மன்றத் தேர்த லுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள் ளும் பணி நாளை மறுநாள் 28ஆம் திகதிக்கு பின்னர் ஆரம்பிக்கப்படும் எனவும், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டாலும், குறித்த திகதியில் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலை நடத்து வதற்கான சாத்தியக்கூறுகள் ஏறக்குறைய இல்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், சிறீலங்கா பொது ஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சி யும் இணைந்து தேர்தலை சந்திக்கவுள்ள தாக அறிவித்துள்ளன. இதன்படி, சிறீ லங்கா பொதுஜன பெரமுன அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் போலி ஆவணங்களை அனுப்புவதற்கு ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## நாட்டில்...

நோயாகும். பல ஆண்டுகளாக நாம் இந்த நோய்க்கு அடிமையாகியுள்ளோம். இதிலிருந்து விடுபடுவதற் கான பலம் எம்மிடமில்லை என பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித் தார்.

நத்தார் பண்டிகை தினமான நேற்று கொழும்பு - பன்னிப்பிட்டி தேவால யத்தில் இடம்பெற்ற ஆராதனையின் போது உரையாற்றுகையிலேயே பேரா யர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன், வெளிநாடுகளிலிருந்து கடன் பெற்று, அதன் மூலம் உணவு உண்பதற்கு நாம் பழகியுள்ளமை வெட்கப்பட வேண்டிய முன்னுதாரண மாகும். முன்னைய காலங்களைப் போன்று எமக்கு தேவையானவற்றை நாமே உற்பத்தி செய்யும் நிலைமை காணப்பட்டால், இன்று இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டியிருந்திருக்காது.

புதிதாக தோற்றம் பெறும் அனைத் துக்கும் அடிமையாகி, அனைத்தையும் வணங்கும் சமூகம் எமது நாட்டில் தோற் றம் பெற்றுள்ளது. உலகின் சொத்துக் களுக்கும் அதிகாரத்துக்கும் அடிமையா காமல், அவற்றின் மீது பேராசை கொள் ளாமல் அவற்றிலிருந்து மீள வேண்டும் என்பதையே இயேசு கிறிஸ்துவின் பிறப் பும் இறப்பும் வலியுறுத்துகின்றன. புத்த பெருமானும் இதனையே போதித்துள் ளார்.

எமது நாட்டில் தயாரிக்கக்கூடிய அனைத்தையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நாம் பழகியுள் ளோம். இதன் காரணமாக நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட் டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் அவை எத னையுமே இறக்குமதி செய்வதற்கு எம்மிடம் இன்று பணம் இல்லை.

முன்னைய காலங்களைப் போன்று எமக்கு தேவையானவற்றை நாமே தயாரிப்பதற்கு பழகிக்கொண்டிருந்தால், இன்று எமக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. வெளிநாடுகளிலி ருந்து கடன் பெற்று, அதன் மூலம் உணவு உண்பதற்கு நாம் பழகியுள்ளமை வெட்கப்பட வேண்டிய முன்னுதாரண மாகும்.

நாட்டில் இன்று நேர்மை காணப்படு கின்றதா? அடி மட்டத்திலிருந்து உயர் மட்டத்தில் உள்ளவர்கள் வரை அனை வரும் சட்டத்துக்கு முரணாகவே வருமா னம் பெறுகின்றனர். நாட்டை பொறுப் பேற்கும் தலைவர்களும் அவ்வாறே செயல்படுகின்றனர். இது எமது நாட் டில் பரவியுள்ள ஒருவகை நோயாகும். பல ஆண்டுகளாக நாம் இந்த நோய்க்கு அடிமையாகியுள்ளோம். இதிலிருந்து விடுபடுவதற்கான பலம் எம்மிடமில்லை.

எம்மிடம் சொத்துக்கள் காணப்படு வது போதுமானதல்ல. இன்றைய சூழ லில் பொய்களுக்குப் பின்னால் செல் வதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். வறுமை நிலையில் உள்ளவர்களுடன் நத்தார் தினத்தை நாம் கொண்டாட வேண்டும் - என்றார். (ஐ)

# இனப் பிரச்னை தீர்வுப் பேச்சு; மத்தியஸ்தம் தேவையில்லை!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 26

இனப் பிரச்னை தொடர்பான பேச் சுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை இல்லை என்று ஜனாதிபதியின் சர்வதேச காலநிலை ஆலோசகரும் நோர் வேயின் முன்னாள் விசேட சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரி வித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் வார இதழ் ஒன்றுக்கு அவர் அளித்த நேர் காணலிலேயே எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்னை தொடர்பிலான பேச்சுக்கு நான் மத்தியஸ்தம் வகிக்கப் போவதில்லை. நோர்வே மாத்திரமல் லாமல் வேறு எந்தவொரு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தமும் தற்போது தேவை இல்லை.

உள்ளக ரீதியாக பேச்சுகளை முன்னெடுத்து இனப் பிரச்னைக்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். இனப் பிரச்னைக்கு உள்ளக ரீதியில் தீர்வு காண்பதற்கான சூழ்நிலை கள் தற்போது உருவாகியுள்ளது.

இலங்கை பல்லின அடையாளங் களை கொண்ட நாடு என்பதால் அனைத்து இனங்களின் அபிலாசைகளும் பூர்த்தி செய்யப்படும் வகையில் ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியு ள்ளார். (ஐ)

# காலநிலை அபாயத்தை அறிவிக்க 117 அவசர தொலைபேசி இலக்கம்!

கொழும்பு, டிசெ. 26

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக நாட் டின் பல பகுதிகளிலும் கடும் மழை பெய்து வரு கிறது.

தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக எதிர்வரும் கால நிலை நில வரம் குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க நாட்டுமக்களுக்கு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

கடும் மழை காரணமாக, ஏதேனும் ஒரு பிரதேசத் திலோ அல்லது இடத் திலோ மண்சரிவு ஏற்படுவதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால் அது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு அறிவிக்குமாறு கோரப் பட்டுள்ளது.

117 என்ற விசேட தொலைபேசி எண்ணுக்கு தொடர்புகொண்டு ஏதே னும் பேரிடர் ஏற்படும் சூழ் நிலை மற்றும் துயரங்கள் குறித்த தகவல்களை தெரிவிக்கமுடியும் என்று தெரிவித் துள்ளது.

கிழக்கு கடற்பரப்பு ஊடாக நாட் டைக் கடக்கும் காற்றழுத்த தாழ்வு காரணமாக தற்போது பல பகுதி களில் கடும் மழையும் காற்றும் நிலவுவதாக வளிமண் டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீனவர் மற்றும் கப்பல் போக்குவ ரத்து சமூகம் மறு அறிவித்தல் வரை தென்மேற்கு வங்காள விரிகுடா கடற் பரப்பில் பயணிக்க வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் கேட் டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, அத்துடன் மலையகப் பகுதிகளில் உள்ள வீதிகளில் வாகனங் களை செலுத்தும் சாரதிகளும் அவதா னத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது. (ஐ)

## தேவாலயத்தில்...

காணிக்கைகள் அனைத்தும் மாதம்பை புனித செபஸ்தியார் தேவாலயத்துக்குக் கொண்டு வரப்பட்டு புனித செபஸ்தி யார் தேவாலயத்துக்கு வழங்கப்பட்ட காணிக்கைகளுடன் சேகரிக்கப்பட்டு ஊழியர் ஒருவரால் சரிபார்க்கப்பட்டன. இதன்போதே இந்தத் தோட்டாக்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட் டது.

இந்தச் சம்பவம் புத்தளம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி ஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர். (ஐ)

## ஆழிப்பேரலை...

முழுவதும் பல்வேறு அஞ்சலி நிகழ்வு கள் நடைபெறவுள்ளன. பிரதான நினைவேந்தல் காலி மாவட்டத்தில் பெரலிய சுனாமி நினைவாலயம் முன்பாக நடைபெறவுள்ளது.

இதேவேளை, 2004 டிசெம்பர் 26 அன்று சுமாத்திரா தீவுக்கு அண்மை யாக கடலில் 9.3 ரிக்டர் அளவில் ஏற் பட்ட நில நடுக்கத்தால் ஆழிப் பேரலை ஏற்பட்டது. இலங்கை, இந்தியா, இந் தோனேசியா உட்பட 6 நாடுகளை தாக் கிய இந்த ஆழிப்பேரலையால் ஒரு இலட் சத்து 84 ஆயி ரத்து 167 பேரின் மரணம் உறுதிப் படுத்தப்பட்டது. 43 ஆயிரம் பேர் வரை காணாமல் போயினர் அல் லது அவர்களின் மரணம் உறுதிப்படுத் தப்படவில்லை என்பது குறிப் பிடத் தக்கது. (ஐ)

## இரண்டு..

மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி இலங் கையை தாக்கிய ஆழிப் பேரலையால் இலங்கையில் 35 ஆயிரத்து 322 பேர் உயிரிழந்தனர். 21 ஆயிரத்து 411 பேர் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொழில்...

வேலை வாய்ப்பு அளிக்கின்றது.

இணைக்கப்படும் வீரர்கள் நான்கு மணி நேரம் அலுவலகத்திலும் விளை யாட்டு மைதானத்தில் நான்கு மணி நேரமும் பணியாற்ற வேண்டும். இணைந்து கொள்ள விரும்பும் வீரர்கள் 077 801 9162 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளது. (ஐ)

## மன்னாரில்...

மன்னார் சிலாவத் துறையில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஒரு படகில் மீன்பிடிக்கச் சென்ற இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

தொம்மை டன்சன் டயஸ் (வயது 23), அலெக்சாண்டர் ஹாரிஸ்டன் (வயது 19) என்ற இளைஞர்களே இவ் வாறு காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களை தேடும் பணியில் கடற் படையினர் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## அரியவகை நீல நிற பசு இரு குட்டிகளை ஈன்றது!



கொழும்பு, டிசெ. 26

உலகில் அழிந்து வரும் அரிய வகை விலங்குகளான நீல நிற பசு தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவில் அண்மையில் இரட்டைக் குட்டிகளை ஈன்றது.

பாலூட்டி இனமான, இந்த விலங்குகள் புல் மற்றும் பலா இலைகள் மற்றும் பழங்களை உணவாக உண்கிறது. தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்கா உதவிப் பணிப்பாளர் திருமதி தினுஷிகா மானவடு தெரிவித்தார்.

புதிதாகப் பிறந்த இரண்டு குட்டிகளும் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

## சுற்றுலா பயணிகளாக வருவோர் போதைப் பொருள் விற்பனையில்!

### அமைச்சர் மனுஷ நாணயக்கார சாடல்

கொழும்பு, டிசெ. 26

சுற்றுலா வீசாவில் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகள் பதிவு, அனுமதிப்பத்திரம் இன்றி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் மனுஷ நாணயக்கார காலி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு ஆலோசனை வழங்கினார்.

இவர்கள் பல்வேறு பொருட்களை விற்பது முதல் போதைப்பொருள் விற்பனை வரை பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். சொந்த நாட்டு நாணயத்தை எடுத்துக்கொண்டு திரும்புவதாகவும், இதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸாரிடம் முறைப்பாடு செய்த போதிலும் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்படாததால் பொலிஸார் செய்வதறியாது திண்டாடுகின்றனர். இதன் காரணமாக காலி உள்ளிட்ட உள்ளூர் சுற்றுலாப் பகுதிகளில் வியாபாரத்தில் ஈடுபடுவோர் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

பல்வேறு தொழில் முனைவோர் திட்டங்களின் மூலம் நெருக்கடியில் இருக்கும் 19 ஆயிரம் குடும்பங்களுக்கு வலுவூட்டும் அதே வேளையில், தொழில் முயற்சியில் ஈடுபடாத இளைஞர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்கிய பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஊடாக வெளிநாடுகளில் பணிபுரியச் செய்ய முடியும் என்றும் கூறினார். (ஐ)

# வெற்றிடமாகும் தேசியப்பட்டியலை முற்போக்கு கூட்டணிக்கே வழங்குக!

## வேலு குமார் எம். பி. வலியுறுத்து

கண்டி, டிசெ. 26

"ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றிடமாகும் தேசியப் பட்டியல் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டும்." - தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

"கடந்த 2020 ஆம் ஆண்டு பொது தேர்தலில் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஏகோபித்த அரசியல் கூட்டணியாக தமிழ் முற்போக்கு கூட்டணி மீண்டும் மலையக மக்களால் அங்கீகரிக்கப்பட்டது. அதன்போது, தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டிருந்தது.

அத்தேர்தலில், "தேசிய பட்டியலில் இருந்து ஒரு பிரதிநிதித்துவம் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கப்படும்" என்ற உறுதி அளிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு காரணங்கள் காட்டி தேசியப் பட்டியல் உறுப்புரிமை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்கப்படவில்லை.

எனினும், எதிர்காலத்தில் வெற்றிடம் ஒன்று வருகின்ற போது, அதனை தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு வழங்குவதாக கூறப்பட்டிருந்தது. தற்போது, தேசிய பட்டியலில் வெற்றிடம் ஒன்று உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அவ்வாறாயின், ஐக்கிய மக்கள் சக்தியில் வெற்றிடமாகும் அந்த தேசிய பட்டியல், தமிழ் முற்போக்கு கூட்டணிக்கே வழங்கப்பட வேண்டும். கடந்த பொது தேர்தலில், தமிழ் முற்போக்கு கூட்டணி 8 மாவட்டங்களில் போட்டியிட்டிருந்தது. அதன்போது 4 மாவட்டங்களில் இருந்து 6 உறுப்பினர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து அதிகபட்சமான வாக்குகள் பெறப்பட்டிருந்தன.

வரலாற்றில் முதல் தடவையாக, இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து 36 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை தமிழ் முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பெற்றிருந்தார். கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் பெறப்பட்டிருந்தன. பிரதிநித்துவம் கிடைக்கப்பெறாத மாவட்டங்களில் நாம் பெற்றுக்கொண்ட வாக்குகளின் மூலம் நேரடியாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பயனடைந்துள்ளார்கள். அந்த வகையில் தேசிய பட்டியலில் இருந்து எமக்கு ஒன்றல்ல, இரண்டு பிரதிநித்துவம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

எனினும், அப்போதைய அரசியல் சூழ்நிலையில் இருந்த பல்வேறு காரணங்கள் அதனை பெறுவதில் தடையை ஏற்படுத்தி இருந்தது. எனினும், அந்நிலைமைகள் தற்போது மாற்றமடைந்துள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய பங்காளி கட்சியாக உள்ளது. அந்த வகையில் வெற்றிடமாகும் தேசிய பட்டியல் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதற்கான முழு உரிமையும் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு உள்ளது. அதே போன்று அதனை பெற்றுக்கொடுக்க வேண்டிய கடப்பாடு ஐக்கிய மக்கள் சக்திக்கு உள்ளது." - என்றார். (ஐ)

# மார்கழி இசைவிழா: நாளைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். இந்திய துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடல், யாழ். வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசைவிழா 2022 நாளை செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகிறது.

டான் தொலைக்காட்சி குழுமத்தின் ஊடக அனுசரணையில் தொடர்ந்து மூன்று தினங்கள் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதலாம் நாளான நாளை மாலை 4.45 மணிக்கு மகிழ்வொளி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்தை இந்திய கோரணர் இசைப்பிரிவு மாணவர்கள் இசைப்பர், தொடர்ந்து வரவேற்பு நடனத்தை யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்கள் வழங்குவர், வாத்திய பிருந்தா நிகழ்வை கீதவாகினி இசைக்கல்லூரியினர் வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்களின் நர்த்தன சமர்ப்பணம் நடனம், அனுராகம் கவின் கலை நிலையத்தினரின் வீணா வர்ஷணம், குமரன் குழுவினரின் நாத சங்கமம் என்பன இடம்பெறவுள்ளன. (ஐ)

# விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 26

மின்சாரக் கட்டணத்தை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் அதிகரிக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

பிரஜைகளுக்கு வாழ்வதற்கு காணப்படும் உரிமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளமையை கருத்தில்கொண்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படுகின்றமை தொடர்பில் ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளை அடிப்படையாக கொண்டு இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை உள்ளிட்ட துறையுடன் தொடர்புடைய முக்கிய அதிகாரிகளிடம் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேவைப்படும் பட்சத்தில் மின்சக்தி அமைச்சர், இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஆகியோரிடமும் விடயங்களை கேட்டறிய எதிர்பார்ப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுவருடத்துக்கு முன்னர் அடகு கடன் 23 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும்!

கொழும்பு, டிசெ. 26

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைப்போரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக வேகமாக அதிகரித்து வருகிறது என்று நிதி அமைச்சின் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நாட்டின் வங்கிகளில் 2022 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 19 ஆயிரத்து 300 கோடி ரூபாய்களுக்கு அடகு வைக்கப்பட்டது. பெரும்பாலும் நடுத்தர வருமானம் ஈட்டுபவர்களால், முக்கியமாக குழந்தைகளின் கல்வி மற்றும் சுகாதாரம் மற்றும் விவசாயிகளின் விவசாய நோக்கங்களுக்காக இந்த அடகுக்கடன் பெறப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இந்த தங்க அடகு கடன்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் 23 ஆயிரம் கோடி ரூபாய்களை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாடு முழுவதும் ஏராளமான மக்கள் மருந்துகள் மற்றும் உணவு போன்ற அவசர தேவைகளுக்காக தங்கள் தங்க ஆபரணங்களை அடகு வைத்துள்ளனர்.

அரச வங்கிகளைத் தவிர சில தனியார் வங்கிகள் ஏற்கனவே தங்கள் கடனைத் தீர்க்கக் கோரி வாடிக்கையாளர்களுக்கு இறுதி அறிவித்தலை அனுப்பியுள்ளன.

வங்கி நிலுவைத் தொகையை மீட்பதற்காக தங்கப் பொருட்களை ஏலம் விடுவதற்கான கடைசி எச்சரிக்கை அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது. வங்கிகளில் தங்கத்தை அடகு வைக்கும் முன்பணங்களுக்கு 24 - 36 சதவீதம் என்ற உயர் வட்டி விகிதம் அறவிடப்படுகிறது. இதனை தங்களால் தாங்க முடியாதது என்று வாடிக்கையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)

# இந்து இளைஞர் ஏற்பாட்டில் கலைவிழா நடைபெற்றது!

யாழ்ப்பாணம், டிசெ. 26

சங்கானை இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்திய மாபெரும் கலைவிழா நேற்று மன்றத்தின் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

மன்றத்தின் தலைவர் யோ. பிரசாந்தன் தலைமை தாங்கிய இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பிரதம அதிதியாகவும், வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் கலாசார முறைப்படி, சிறுவர்களின் குதிரையாட்டம் மற்றும் மயிலாட்டத்துடன் அழைத்து வரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. அதன்பின்னர் கலை நிகழ்வுகள், விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மாவடி இந்து இளைஞர் மன்றத்தினர், கலைஞர்கள், சங்கானை பிரதேச செயலகத்தினர், சமூக மட்ட அமைப்பினர், கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.